புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

Vol.5: Issue.2, April 2025

ISSN : 2583-0139

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

Vol.5: Issue – 2, April– 2025 ISSN:2583-0139

புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

Editor-in-Chief

Dr S.Thangamani

இணைப் பதிப்பாசிரியர்

முனைவர் ரா.பிரேம் குமார்

Associate –Editor

Dr R.Prem Kumar

ஆசிரியர் குழு

முனைவர் மனோன்மணி தேவி

முனைவர் ஜா.அமிர்தலெனின்

முனைவர் ஆ.முத்தையன்

முனைவர் ச.கோபிநாத்

முனைவர் க.வெள்ளியங்கிரி

முனைவர் சா.யமுனாதேவி

முனைவர் இரா.கோகுல்

நிறுவனர்

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்

3/199 ஆ.கூடலூர், ஆய்ந்தூர் (அஞ்சல்)

கண்டாச்சிபுரம், விழுப்புரம் - 605755

editor@pulamejournal.com

editor@masivanpathippagam.com

pulamejournal@gmail.com

+919486069548

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2025 • All Rights Reserved •

Index

S.No	Title & Author	Pages
1	Najeeb's heart-wrenching story, illustrated by the novel Aadujeevitham / ஆடுஜீவிதம் நாவல் சித்தாரிக்கும் நஜீப்பின் உலுக்கும் கதை **Chinnasamy.L, Mehmuda. M / சின்னச்சாமி.ல, மெஹ்முதா. மீ**	01
2	Femininity and Masculine Authority in the Novel Karuvachi Kaviyam / கருவாச்சி காவியம் நாவலில் பெண்நிலையும் ஆண்மைய அதிகாரமும் **Iswarya.P / ஐஸ்வர்யா.பொ**	08
3	The State of Iravalar in Purananooru / புறநானூறு காட்டும் இரவலர் நிலை **Mahalakshmi.A, Velliyangiri. K / மகாலட்சுமி.அ, வெள்ளியங்கிரி.க**	17
4	Akrinai first names in the Thirukkural / திருக்குறளில் அஃறிணை முதற்பெயர்கள் **Suganthi.S, Kannan. R / சுகந்தி.சு, கண்ணன்.அர**	24
5	Thinai Marabugalum Siraipuramum / திணை மரபுகளும் சிறைப்புறமும் **Thilagavathi.A, Prem Kumar R / திலகவதி. அ, பிரேம் குமார். ரா**	33

ஆடுஜீவிதம் நாவல் சித்தரிக்கும் நஜீப்பின் உலுக்கும் கதை

Najeeb's heart-wrenching story, illustrated by the novel Aadujeevitham

சின்னச்சாமி.ல*, மெஹ்முதா. மீ*

*தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குனியமுத்தூர், கோவை - 641 008

Chinnasamy.L*, Mehmuda. M*,

*Department of Tamil, Sri Krishna College of Arts and Science, Kuniyamuthur, Coimbatore - 641 008.

ORCID: https://orcid.org/ 0009–0009–9945–0784

DOI: 10.5281/zenodo.15308942

Abstract

The last of the three categories of Kurinji, Mullai, Marutham, and Neithal, the milky way, does not have much opportunity to fully express itself in the fertile Tamil landscape. Not only this, but Tamils do not have as much closeness to the desert expanse of the Gulf as their neighboring Malayalis.

The creation of a mandar in a novel is a rare art. Not only in novels but also in short stories, the creation of a mandar is also a reason. What remains in the hearts of readers is the creation of the protagonist Najeeb.

The main characters of this story, the hero of the story, who leaves his home and country for a living, and is caught in the scorching desert by the negligence of fate, leaves his own country and goes abroad for work. There, they are deceived, imprisoned, and work as slaves. Thus, the suffering of the protagonist Najeeb of the novel Aadujeevitham is portrayed in a moving way.

ஆய்வுச்சுருக்கம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் திணைப் பாகுபாட்டில் கடைசியாக வரும் பாலை செழிப்பான தமிழ்ப் பரப்பில் தன்னை முழுமையாக வெளிப்படுத்த அதிகம் வாய்ப்பில்லை. இதுமட்டுமல்ல, அண்டை வீட்டு மலையாளிகளைப் போல் தமிழுக்குப் பாலைவனப் பரப்பான வளைகுடாவுடன் அத்தனை நெருக்கம் இல்லை எனலாம்.

நாவலில் மாந்தர் படைப்பு என்பது ஓர் அரிய கலை. நாவலில் மட்டுமின்றி சிறுகதை போன்றவற்றிலும் மாந்தர் படைப்பும் ஒரு காரணமாக அமைகின்றது.

இந்நாவலில் வாசகர்களின் நெஞ்சில் நிலைத்து நிற்பது கதா நாயகன் நஜீப் படைப்பு ஆகும்.

இக்கதையின் முதன்மைப் பாத்திரமாக நஜீப், வயிற்றுப் பிழைப்புக்காக வீட்டையும் நாட்டையும் பிரிந்து, விதியின் அலட்சியத்தால் சுட்டெரிக்கும் பாலைவனத்துக்குள் சென்று அகப்பட்டுக் கொள்ள, தன் சொந்த நாட்டை விட்டு வேலைக்காக வெளிநாடு செல்கிறான். அங்கு அவர்கள் ஏமாற்றப்பட்டு சிறை தண்டனை மற்றும் அடிமையாக வேலை செய்கிறார்கள். இவ்வாறு ஆடுஜீவிதம் நாவலின் கதா நாயகன் நஜீப் படும் துயரத்தை உலுக்கும் பாத்திரமாக இந்நாவல் எடுத்துரைக்கிறது.

Key words: வறுமைச் சூழல், நஜீப், மனைவி, சைனு, நபீல், ஆடுகளுக்கு பெயர் சூட்டுதல், மேரி மைமூனா, புல்காரி ரமணி, அர்பாபுவின் மகன் திருமணம் குஞ்ஞுக்கா.

முன்னுரை

வலிகளின் வேர்களைத் தேடி எழுத்தாக வடித்துக் கடந்த 2008 ம் ஆண்டு எழுத்தாளர் பென்யமின் எழுதிய நாவலாக ஆடுஜீவிதம் திகழ்கிறது. எட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, பரவலாக வாசிக்கப்பட்டது. நாவல் உண்மைச் சம்பவத்தை ரத்தமும், சதையுமாக எழுத்தின் வழியே காட்சிப்படுத்தியுள்ளது. நாவலின் கதாநாயகனாக நஜீப் வருகிறான். இவரது வாழ்க்கை பாலைவனம் போல வறட்சியாகவே நாவல் முழுவதும் படைக்கப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை வழியே அறியமுடிகிறது.

நஜீப்பின் வறுமைச்சூழல்

“மக்களின் வருவாய்க் குறைவை வறுமை எனவும் அவர்தம் வாழ்க்கைக்கு வேண்டிய அவசிய பொருட்களின் பற்றாக்குறைவை வறுமை எனவும் வரையறுக்கலாம்” என்று பொருளியல் அறிஞர் அமிர்தலிங்கம் கூறியுள்ளார். சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் வறுமை உருவாகின்றது. செல்வந்தர்கிடம் மட்டுமே பொருளாதாரம் தேங்கிவிட்டதால் ஏழைகள் ஏழைகளாகவே இருக்கின்ற நிலைமை உள்ளது. இலக்கியவாதிகள் வறுமையைப் பாடுவது வாடிக்கையாகி விட்டது.

நம்நாடு வளம் மிகுந்தது எனினும் வறுமைக்குக் குறைவில்லை அதனை,

“தேனாறு பாயுது - வயலில்

செங்கதிரும் சாயுது - ஆனாலும்

மக்கள் வயிறு காயுது”

என்கிறார் பட்டுக்கோட்டையார். இதனை ஆடுஜீவிதம் நாவலின் நஜீப் குடுப்பத்தின் வறுமையைப் போக்க வேறு வழியின்றி தன் சொந்த ஊரைவிட்டு வெளயேறி வெளிநாட்டுக்குச் சென்று வேலை தேடி குடும்பத்தைக் காப்பாற்ற நினைத்து. சவுதியில்

சூப்பர் மார்க்கெட் ஒன்றில் சேல்ஸ்மேன் வேலை காலியாக உள்ளது என்று ஏஜென்ட் ஒருவர் சொன்ன பொய்யை நம்பியது வாழ்வில் அவர் செய்த மிகப்பெரிய பிழை. விசா பெறுவதற்கு பணம் தேவை என்ன செய்வதென்று தெரியாதவர். தனக்கென இருந்த ஐந்து சென்ட் நிலத்தை விற்று அதன் மூலம் கிடைத்த ஐம்பத்தைந்தாயிரம் பணத்தை கொடுத்திருக்கிறார்.

"விசா வந்த விபரத்தைச் சொல்ல கருவாற்றக்கார நண்பனைப் பார்க்க போனபோதுதான் தெரிந்தது. தனுவச்சபுரத்தைச் சேர்ந்த வேறொரு பையனுக்கும் என்னைப் போலவே விசா வந்திருக்கிறதென்று அதே மச்சான் மூலமாக இரண்டு பேருக்குமே ஒரே கம்பெனிதான். வெளியுலகமே தெரியாத, இருவரும் சேர்ந்து போவதும் நல்லதுதான்." என்று ஆடுஜீவிதம் நாவல் வழி அறியலாம்.

வெளிநாட்டில் நஜீப்

நஜீப் அரபு நாடு சென்று இறங்கியதும், அரபுநாட்டைச் சேர்ந்த ஒருவர் இவனை வண்டியில் அழைத்துக் கொண்டு சென்றார். சில மணிநேரம் பயணித்த இடங்களில் மரங்களையோ, கட்டடங்களையோ பார்க்க முடியவிலலை. வெறும் கட்டாந்தரையை மட்டுமே பார்க்க முடிந்தது. அவனது அரபு முதலாளி மற்றும் அவரது சகோதரரைத் தவிர வேறு ஒரு மனிதரையும் இவன் பார்க்கவில்லை. அவனுக்கு சம்பளமாக ஒரு ரியாஸ் கூட கொடுக்கப்படவில்லை

வெயிலூறிக் கிடக்கும் அந்த பாலைவனத்தை அடைந்ததும், கொண்டு வந்துவிட்டவர் புறப்பட, தனியொரு ஆளாக உயிரையும், பயத்தையும் பற்றிக்கொண்டு நின்றிருந்த நஜீப்புக்கு நாள்தோறும் அழுகை மட்டுமே ஆறுதல் தந்தது. எழுநூறு ஆடுகளைத் தனியொரு ஆளாக மேய்க்க வேண்டும். தங்குவதற்கு சிறிய கொட்டகை அதிலும் முதலாளியே படுத்துக்கொள்வார். உணவுக்கு காய்ந்த ரொட்டி கிடைக்கும் ஆட்டுப் பாலில் ரொட்டியை நனைத்து சாப்பிட்டு உயிர்வாழ்திருந்தான்.

மனைவியும் குழந்தையும்

சைனு

வானிலிருந்து மண்ணை நோக்கி வரும் மழை நீரை விடவும் தூய்மையானது. அண்ட சராசரங்களில் கண்ணுக்குத் தெரியாமல் வீசிக் கொண்டிருக்கும் காற்றை விடவும் மென்மையானது. தீரா வெயிலின் நடைக் களைப்பில் முதிர்கிழவி நிழலைக் கண்டால் எவ்வாறு ஆசுவாசத்தை அனுபவிப்பாளோ அது போன்றது. மனிதப் பிறப்பில் திருமணபந்தம் என்பது உறவின் உன்னதமாக கருதப்படுகிறது. அவ்வகையில் ஆடுஜீவிதம் நாவலில் நஜீப்பின் மனைவியும் குழந்தையும் நினைவுகளோடு இருந்தார்கள் என்பதை நாவல் முழுவதும் எடுத்துகக்காட்டப்படுகிறது.

“நஜீப் மனைவி சைனு. கருவுற்றிருந்தாள். அவள் எந்த நிமிடமும் பிரசவிக்கலாம் என்ற நிலையில்தான் ஊரிலிருந்து நான் புறப்பட்டு வந்தேன்.” இவ்வாறு சைனு குறித்த எண்ணங்கள் கதை முழுக்க இழையோடுவதைக் காணமுடிகிறது.

நபீல்

“என் மகனுக்காக நான் பாதுகாத்து வைத்திருந்த பெயர் நபீல். நபீல் என் மகன். நபீல் நீ எனக்கு அல்லா`ஹ் தந்த ஒப்பற்ற பரிசு.” என்று பிறக்கப்போகும் தனது குழந்தை குறித்த ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார் நஜீப்.

ஆடுகளுக்கு பெயர் சூட்டுதல்

நஜீப் அரபு நாடுக்குச் சென்று அங்கு தனக்கு கிடைத்த வேலையாகிய ஆடு மேய்கும் வேலையை செவ்வனே செய்து வந்தான். ஆடுகள் வருடக்கணக்கில் குளிப்பாட்டப்படாமல் இருப்பதால் பாலில் துர்நாற்றம் வீசும். அரபு நாட்டைச் சேர்ந்தவர் அவனிடம் சில ஆடுகளைக் குறிப்பிட்டடுப் பிடிக்கச் சொல்வார்கள் அவர்களின் மொழி புரியாமல் கறுப்பு ஆட்டைப் பிடிக்கச் சொன்னால் வெள்ளை ஆட்டைப் பிடிப்பான். அதனால் அவர்கள் கோபத்துக்கு ஆளானான். அதனால்,

முஸராவுக்குள் உள்ள அனைத்து ஆடுகளுக்கும் நஜீப் பெயர் சூட்டியிருந்தான். சுவாரசியத்துக்காகவும், தேவைப்பட்டால் திட்டித் தீர்ப்பதற்காகவும், கொஞ்சுவதற் காகவும் தன்னுடைய நண்பர்கள் பெயரையே ஆடுகளுக்கும் சூட்டுகிறான்..

கசாப்பு ராவுத்தர், மேரி மைமுனா, இண்டிப்போக்கர், நண்டு ராகவன், பருப்பு விஜயன், சக்கி, அம்மிணி, கௌஸஹீ ரௌஃபிக், நபீல், பிங்கி, அம்மு, ரஸஹியா, தா`ஹிரா என்ற கிராமத்துப் பெயர்களுடன் ரஜினிகாந்த், வடிவேல்... ஏன் அரசியல் தலைவர்கள் வரை பெயரைச் சூட்டியிருந்தான் நஜீப். இவர்கள் எல்லோருமே ஏதாவதொரு விதத்தில் நஜீப்பிற்குப் பிடித்தமானவர்கள் இருந்தனர்.

ஆடுகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தால் அவை ஒரு மனிதனின் முகச்சாயலில் இருப்பதை உணரமுடியும். ஆடுகளுக்கு, முகச்சாயல் வைத்து மட்டுமே பெயரை அவன் கொடுப்பதில்லை. அதன் இயல்பு, நடை, குரல், பார்க்கும் பார்வை போன்றவற்றோடு தொடர்புபடுத்த ஏதோவொரு சம்பவம் என்று ஆடுகளுக்கான பெயர்க் காரணம் ஊரில் ஆட்களின் பட்டப்பெயர்களுக்கு காரணமிருப்பதைப் போல் நீண்டு போகும் என்பதை நஜீப்பின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகியுள்ளன.

நஜீப்பின் முதல் காதல் மேரி மைமூனா

“பருவம் எய்தாப் பெண்ணை ஒருவன் காதல் கொள்கிறான், காதற்றுன்பமும் படுகிறான். நன்மை எனவும் தீமை எனவும் அவளைத் தன்னோடு உறவு

படுத்திச் செருக்குக் கொள்கிறான். அவளிடமிருந்து மறுமொழியாக ஒரு சொல்லும் பெற்றானில்லை, எனினும் தானே சொல்லிச் சொல்லி இன்புறுகிறான்" என்பது வ.சு.ப.மாணிக்கத்தின் கருத்தாகும்.

“காமஞ்சால இளமையோள் வயின்

ஏமஞ்சாலா இடும்மை யெய்தி

நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்

தன்னொடும் அவளொடும் தருக்கிப் புணர்ந்துச்

சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின்புறல்

புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே”

என்ற நூற்பாவின் மூலம் ஒரு மனக் காதலைப் பற்றி தொல்காப்பியர் தன்னுடையக் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

“என் காதல் கதையின் முதல் நாயகி, ஐந்தாம் வகுப்பில் தான் என் முதல் காதல் அரும்பியது. என்னுடைய வகுப்பின் மிக அழகான, துடிப்பான, நல்ல சங்கீத ஞானம் உள்ளவள் மேரி” என்று தனது முதல் காதல் குறித்த நினைவுகளை எண்ணிப்பார்க்கிறான் நஜீப். இந்த காதல் விஷயத்தை அவனது அம்மாவுக்கு தெரியப்படுத்திய அப்துலை நயவஞ்சகன் என்று நொந்துகொள்கிறான்.

புல்காரி ரமணி

நஜீப் மஸராவுக்குப் போன தினத்தில், முதன்முதலாக பால் கறக்கச் சென்ற ஆட்டுக்குத்தான் புல்காரி ரமணி என்று பெயர் சூட்டியிருந்தான். முதலாக கை வைத்த ஆடு என்பதே அந்த பெயருக்கு காரணமாக அமைந்த சூழல் என்பதை நாவல் பதிவு செய்துள்ளது.

“என்னுடைய மாமா ஒருவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போவார். நான் அவரை போக்கர் மாமா என்று கூப்பிடுவேன்.” போக்கர் மாமா என்னையும் கூட்டிக்கொண்டு சற்று தூரத்திலிருக்கும் ஒரு பம்ப் செட்டுக்கு போய், புல் அறுக்க வரும் பெண்களுக்காக காத்துக் கொண்டிருப்பார். அப்படி வரும் பெண்களில் ஒருத்திதான் ரமணி. எங்களூரின் பெயர்பெற்ற ஒரு தாசிதான் புல்காரி ரமணி என்று நஜீப் எடுத்துரைக்கிறான்.

அர்பாபுவின் மகன் திருமணம்

நஜீப் மஸராவிலிருந்து தப்பித்துப்போகும் வாய்ப்பானது மூத்த அர்பாபுவின் மகளுக்கு அன்று இரவு நடக்கவிருந்த திருமணம் ஆகும். அன்று அர்பாபுகள் இருவரும் கிளம்பும்போது நஜீப்பிடம், நீ உறங்காமல் ஆடுகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள

வேண்டும். நரிகள் வரும், பாம்புகளும் வரலாம். ஏன், சில சமயம் திருடர்கள் கூட வருவார்கள். நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காலையில் நான் திரும்பி வரும்போது உனக்கு குபூஸம், பிரியாணியும், மஜ்பூஸஹீம் கொண்டு வருவேன். நீ எனது நம்பிக்கைக்குரிய வேலைக்காரன் என்று சொல்லியதைக் கேட்டு நஜீப்பும் நம்பிக்கையுடன் இருந்தான் அத்தனை நாள் கடின வேலைக்குக் கிடைத்த பரிசுகளே அர்பாபுவின் அந்த வாக்குகள்! ஆமாம் வெறும் வாக்குகள் மட்டும்தான் என்று அவன் அர்பாபின் கொடூர செயல்பாடுகளை எண்ணி நொந்துகொண்டான் என்பதை நாவல் பதிவு செய்துள்ளது.

குஞ்ஞுக்கா

அரபு நாட்டில் நஜீப் வாழ்க்கையில் திருப்புமுனையாக குஞ்ஞுக்கா திகழ்கிறார் அவர் நஜீப்பிற்கு உறுதுணையாக இருந்ததை எண்ணிப்பார்க்கிறான்

“பத்தா சந்தையின் அப்படிப்பட்ட ஒரு மலையாளி ஆலமரமான குஞ்ஞுக்காவின் ஹோ`ஹாட்டலுக்கு முன்னால்தான் நான் மயங்கி விழுந்திருந்தேன். அல்லாவின் கருணையைத்தான் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அறிமுகமேயில்லாத அந்தச் சந்தையில் ஊரும் திசையும் தெரியாமல் திக்கு முக்காடிக் கொண்டிருந்த நான் எங்காவது ஒரு மூலையில் போய் மயங்கி விழுந்திருக்கலாம்” என்று நஜீப் வேதனைப்படுகிறான். மேலும், அந்த பயங்கர உருவத்துக்குள் கிடந்த என்னை ஒருத்தர் கூட திரும்பிப் பார்த்திருக்கமாட்டார்கள். ஆனால் நான் போகவேண்டியது குஞ்ஞுக்காவிடம்தான் என்று செய்தது அல்லவா! மயங்கி விழுந்தேன் என்று தனக்குள்ளேயே கூறிக்கொள்கிறான். குஞ்ஞுக்கா நஜீப்பைப் பாதுகாத்து, பராமரித்தது அவன் மூன்று நாட்கள் கழித்து கண் விழித்த பிறகுதான் அறிந்துகொள்கிறான்.

முடிவுரை

பாத்திரப்படைப்பு என்பது படைப்பாளியின் முழுத்திறனையும் வெளிப்படுத்துவதாகும். பாத்திரப் படைப்புகள் மூலமாக நாவல் ஆசிரியர் பல்வேறு வாழ்க்கையின் அனுபவங்களைப் படைத்துக் காட்டியுள்ளார். பாத்திரங்களின் வளர்ச்சி நிலைகளால் படைப்பாக்க உத்தியும் சிறப்புடன் அமைந்துள்ளது. சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகள் நன்மை, தீமைகளைப் பாத்திரப்படைப்பே வெளிப்படுத்தும் நன்மை வாய்ந்தன என்பதே முடிவுகளாக கருதப்படுகின்றன.

ஒரு நாவலின் வெற்றிக்குத் துணை செய்வது படைப்பாசிரியர் படைக்கும் பாத்திரங்களே ஆகும். நாவலின் மிக இன்றியமையாப் பகுதியாக விளங்கும் பாத்திரங்களை ஆராய்வது சிறப்புடையதாகும். பாத்திரப்படைப்பு என்பது சிறுகதை நாவல் முதலிய படைப்பிலக்கியங்களில் இன்றியமையாது இடம் பெறுவதாகும். பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமான முறையில் அமைக்கும் பொழுது நாவல்

சிறப்பிடம் பெறுகிறது. ஒரு நாவலின் வெற்றி சில நேரங்களில் அதில் இடம் பெறும் பாத்திரங்களைக் கொண்டே அமைகிறது என்பதை நஜீப்பின் பாத்திரம், ஆடுஜீவிதம் நாவலில் கட்டமைத்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

துணைநின்ற நூல்கள்

1. பென்யாமின், ஆடு ஜீவிதம், தமிழில் விலாசினி பொள்ளாச்சி முதல் பதிப்பு 2020
2. அமிர்தலிங்கம், தமிழ்க் கவிதைகளில் வறுமைப்புனைவு 2001
3. கே. ஜீவபாரதி (பதி.ஆ) – கவிதைகள் ஜீவா பதிப்பகம் சென்னை பதிப்பு 1990
4. வேங்கடராமையா, கே.எம் பதிப்பு ஆசிரியர், தொல்காப்பியம் மூலம் பாட வேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு, பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம், திருவனந்தபுரம், முதற்பதிப்பு, 1996.
5. வ.சு.ப.மாணிக்கம், தமிழ்க்காதல், பாரி நிலையம் சென்னை மூன்றாம் பதிப்பு 1980.

References

1. Benjamin, Aadu Jeevitham, Vilasini Pollachi in Tamil, First Edition 2020
2. Amirthalingam, Poverty in Tamil Poetry, 2001
3. K. Jeevabharathi (Editor) – Poems, Jeeva Publishing House, Chennai, 1990
4. Venkataramaiah, K.M. Editor, Textual Differences through Tolkappiyam - An In-depth Study, International Dravidian Linguistics Association, Thiruvananthapuram, First Edition, 1996.
5. V.S.P.Manickam, Tamil Kaathal, Pari Nilayam, Chennai, Third Edition 1980.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

சின்னச்சாமி.ல, மெஹ்முதா. மீ, "ஆடுஜீவிதம் நாவல் சித்தரிக்கும் நஜீப்பின் உலுக்கும் கதை" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 2, ஏப்ரல் 2025, பக். 1-7

Cite this Article in English

Chinnasamy.L, Mehmuda. M, "Najeeb's heart-wrenching story, illustrated by the novel Aadujeevitham " Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 2, April 2025, pp. 1-7

கருவாச்சி காவியம் நாவலில் பெண்நிலையும் ஆண்மைய அதிகாரமும்

Femininity and Masculine Authority in the Novel Karuvachi Kaviyam

ஐஸ்வர்யா.பொ, மொழித்துறை, ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோயம்புத்தூர்.

Iswarya.P, Department of Languages, R.V.S. College of Arts and Sciences, Sulur, Coimbatore.

ORCID ID: https://orcid.org/0000-0008-5833-7091

DOI: 10.5281/zenodo.15308993

Abstract

From the Sangha period to the present day, the status of women has been bound by patriarchal ideological patterns. They have waged many struggles to get out of the environment where women's rights have been denied. But throughout history, obstacles have been denied. Women have been forced to fight for many rights, including education, economy, citizenship, voting rights, and property rights. In this world, men have the right to move freely. Whether that is what women are, remains a question mark in this century. Women are always the victims in the film of revenge. Patriarchy has continued to commit violence against women's bodies and rights. This can be seen in Vairamuthu's novel 'Karuvacchi Kaviyam'.

ஆய்வுச் சுருக்கம்

சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்களின் நிலை, ஆணாதிக்கக் கருத்தியல் வடிவங்களுக்குள் கட்டப்பட்டுக் கிடக்கிறது. பெண் உரிமைகள் மறுதலிக்கப்பட்ட சூழலிலிருந்து வெளியேற அவர்கள் பல போராட்டங்களை நிகழ்த்தி வந்துள்ளனர். ஆனால் வரலாற்றில் அதற்கான தடையங்கள் மறுக்கப்பட்டுள்ளன. கல்வி, பொருளாதாரம், குடியுரிமை, ஓட்டுரிமை, சொத்துரிமை எனப் பல உரிமைகளைப் போராடிப் பெற வேண்டிய நிலைதான் பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது. இந்த உலகத்தில் ஆண் சுதந்திரமாக நடமாடுவதற்கு உரிமை இருக்கிறது. அதுவே பெண் என்றால் இந்த நூற்றாண்டிலும் கேள்விக்குறியாகத்தான் தொக்கி நிற்கிறது. பழிவாங்கும் படலத்தில் என்றுமே பெண்தான் பலியாக்கப்படுகிறாள். பெண்களின் உடல், உரிமை மீது வன்முறையை நிகழ்த்துவதைத்தான் ஆணாதிக்கம் தொடர்ந்து செய்து வந்துள்ளது/ வருகிறது. அதை வைரமுத்துவின் 'கருவாச்சிக் காவியம்' நாவல் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

Keywords: Modern Literature, Vairamuthu, Karuvachi Kaviyam, Novel Literature, Femininity.

முன்னுரை

இன்றைய காலகட்டத்தில் மனித உரிமைக் கூறுகளில், பெண்ணிய விடுதலையையும் சமத்துவத்தையும் வேண்டி குரல் எழுப்பப்பட்டு வருகிறது. அரசுகளும் பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராகப் பல சட்டங்களை இயற்றி சமத்துவம் பேண விழைகின்றன. பெண்கள் காலங்காலமாய் அனுபவித்து வரும் பல்வேறு இன்னல்களைக் கலைதல் பொருட்டு படைப்பாளர்கள் தம் படைப்புகளின் மூலம் குரல் எழுப்புகின்றனர். அத்தகைய படைப்பாளர்களுள் வைரமுத்து குறிப்பிடத்தக்கவர். அவரின் படைப்புகளில் கருவாச்சி காவியம் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் படும் அவலங்களையும், அவர்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைத் தாக்குதல்களையும் இந்நாவல் பதிவுசெய்துள்ளது. அவ்விதத்தில்,

1. அக, புற நிலையில் வதைக்குள்ளாகும் பெண்

2. பொருளாதார மேம்பாட்டை விரும்பாத ஆணாதிக்க மனம்

3. எதார்த்தப் புனைவில் எழுத்தாளனின் அரசியல்

ஆகிய பொருண்மைகளை முன்வைத்து இக்கட்டுரை கருவாச்சி காவியம் நாவலை ஆராய்கிறது.

அக, புற நிலையில் வதைக்குள்ளாகும் பெண்

பெண் மனதளவிலும் உடலளவிலும் மிகவும் திடமானவளாக இருந்தாலும் அவள் ஆணைச் சார்ந்திருக்கிற உயிரியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளாள். ஆணாதிக்கம் அவளது மனதைச் சிதைப்பதன்வழி அச்சத்தையும் உடலை வன்முறைக்குட்படுத்துவதன் வழி இயலாமையையும் கட்டமைத்து வருகிறது. இந்த அச்சமும் இயலாமையும் கருவாச்சி காவியத்தில் இடம்பெற்றுள்ள பெண் கதாபாத்திரங்களில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

"பாலினம் குறித்த பார்வையின்படி பெண்தன்மை (feminity) எப்படிக் கட்டமைக்கப்பட்ட தன்மையில் இயங்குகின்றதோ, அதுபோல ஆண்தன்மையும் (Masculinity) கட்டமைக்கப்படுவதே" (பெண்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள், 2006). என்று அ. மங்கை குறிப்பிடுவதுபோல, பாலின அடிப்படையில் பெண் தாழ்ச்சிக்குரியவளாகவும் ஆண் உயர்விற்குரியவனாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளனர்.

பெண் என்ற உயிரியை ஆணாதிக்கச் சமூகம் பலவிதமான சுரண்டலுக்கு

உட்படுத்துகிறது. அது அகம், புறம் என்ற இருநிலையிலும் நிகழ்த்தப்படுகிறது. மனதளவில் அவளைப் பலவீனப்படுத்துவதும், உடலளவில் அவளை நுகர்வதும் கட்டுப்பாடின்றி ஆணாதிக்கத்தில் நிறைவேற்றப்படுகிறது.

கருவாச்சி காவியத்தில் கருவாச்சி கதாபாத்திரம் இவ்விரு நிலையிலும் வதைக்குள்ளாக்கப்படுகிறார். பழிவாங்குவதற்காக கருவாச்சியைத் திருமணம் செய்யும் கட்டையன் தனது பழியுணர்ச்சியை அவள் உடலின் மீது நிகழ்த்தி தீர்த்துக்கொள்கிறான். மனதளவில் அவளை நிலைகுலையச் செய்கிறான்.

திருமணம் என்ற பெயரில் பெண்களின் சுயமரியாதை அடகு வைக்கப்படுகிறது. அவர்களின் சுதந்திர உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது. கருவாச்சி காவியம் நாவலில் கருவாச்சிக்குத் திருமணமாகி பதினோராம் நாளே அவள் திருமண உறவிலிருந்து திட்டமிட்டு விலக்கப்படுகிறாள். கட்டையன் அவளை திருமணம் செய்து கொண்டதிலிருந்து பழிவாங்கத் தொடங்குகிறான். திருமணமான இரண்டாம் நாள், அவனுடன் இருக்கும் கூட்டாளிகளிடம் போதையில் கருவாச்சியின் உடைலை வதைத்த கதையைப் பகிர்கிறான்.

“கல்யாணமான ரெண்டாம் நாளும் கம்பங்காட்ல வேலையிருக்கு வாடீன்னேன். குட்டியாடு மாதிரி கூடவே வந்தா, நல்ல ஏறு வெயிலு. போய்ச் சேர மத்தியானாமாகிப் போச்சு. காடு கரையயல்லாம் சுத்திக் காட்டிட்டு கரிச்சாம் பாறைக்குக் கூட்டி வந்திட்டேன். உச்சி வெயிலு, சும்மா கொதிக்குது பாறை. அரிசியை எறிஞ்சாப் பொறியாப் போயிரும்...... அம்புட்டுச் சூடு, படுடீன்னேன் வெந்துபோற வெயில்யா மாமான்னு கேட்டா. எல்லாம் ஒரு சாஸ்திரம் தாண்டின்னேன், சரின்னும் முந்தானைய விரிச்சுப் படுத்தா. அதையும் உருவி எறிஞ்சேன். முடிஞ்சு பாத்தா வெந்து கெடக்கு அவ முதுகுத்தோலு”. (2006, அத்தி. 11) இவ்வாறு உடல் ரீதியாக பெண் பழிவாங்கப்படுதலை நாவல் வெளிப்படுத்துகிறது. பெண் உடல் மோகித்தலுக்கானது என்பதுடன் பழிவாங்கலுக்கானது என்பதாகவும் இங்கு மையம் கொள்கிறது. தனது மனைவியாக இருந்தாலும் அவளது அனுமதியின்றி நுகர்வது ஆணாதிக்கத்தின் பெருமையாகக் கொள்ளப்படுகிறது. அதைத்தான் கட்டையன், கருவாச்சி உடல்மீது நிகழ்த்திக்காட்டுகிறான். அதற்கு கருவாச்சி எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அந்த வலியை அனுபவித்துத் தீர்க்கிறாள். இந்தியப் பண்பாட்டில் நிலவும் திருமண அமைப்பு முறையில் ஆணாதிக்கத்திற்கு எதிராகப் பெண் எதிர்ப்புக் குரலையும் கலக மொழியையும் வெளிப்படுத்தாது இருப்பதுதான் சிறந்த இல்லறப்பெண்ணிற்கான அடையாளமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்கான சான்றாகத்தான் கருவாச்சி பதிவாக்கம் பெற்றுள்ளாள்.

அவளது புறவெளியை வல்லுறவிற்கு உட்படுத்தப்படும்போது எவ்வித எதிர்த்தலும் இன்றி ஏற்றுக்கொள்வது இயலாமையின் வெளிப்பாடாக உள்ளது.

குடும்பம் என்ற அமைப்பு, சமூகம் வழங்கியிருக்கும் மதிப்பீடு ஆகியவை பெண்மீது திணித்திருக்கும் இயலாமையின் பிம்பமாக கருவாச்சி காட்சியளிக்கிறாள்.

இதுபோல், கருவாச்சி காவியத்தில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி படுகொலை செய்யப்படும் பதிவுகள் காணப்படுகின்றன. சொர்ணக்கிளி என்ற கதாபாத்திரம் சடையத்தேவருடைய அண்ணன் மகள். அவர் உள்ளிட்ட ஏழு அண்ணந்தம்பிகளுக்கும் அவள்தான் ஒரே பெண் பிள்ளை. பெரியமூக்கியினுடைய அண்ணன் மகன் செயில்ராசு, மாலையில் பருத்தி சாக்கைச் சுமந்து வரும் சொர்ணக்கிளியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துகிறான். அவள் எவ்வளவோ கெஞ்சியும், போராடியும் அவனது பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியவில்லை. இறுதியாக மூச்சுப் பேச்சற்று கிடக்கிறாள். உடனே அவன் அவள் இறந்துவிட்டாள் என நினைத்து பருத்தி சாக்கில் அவளைக் கட்டிக்கொண்டு ஏதாவது பாழுங்கிணற்றில் போட்டுவிட்டுக் கண்காணாத சீமைக்கு போய்விடவேண்டும் என நினைத்துக் கொண்டு தூக்கிச் செல்கிறான். அந்நிலையில் மூட்டைக்குள்ளிலிருந்து உயிரோடிருக்கும் சொர்ணக்கிளி முணகுவதைக் கேட்ட செயில்ராசு,

“அடியே சொர்ணம்! ஒரு வகைக்கு நீ செத்தது நல்லது. எனக்கு சாட்சியிருக்காது. இப்ப நீ பொழச்சது கெட்டது. ஒன்னிய இப்படியே விட்டா நான் காடு கடக்குமுன்ன என்னியக் காணாப் பொணாமாக்கிப் பிடுவானுக ஒங்கப்பன்மாருக. அதுனால நீ செத்தது செத்ததாகவே இருக்கட்டும்.

இடுப்புல சூரியத் தேடினான், காணோம். பதட்டத்துல எங்கேயோ விழுந்து போச்சு, வரப்பு மேட்ல ஒரு கத்திக்கல்லு, அந்தக் கல்ல மண்ணோட பேத்தெடுத்த கொலகாரப் பாவி. கும்புட்டுக் கெடந்தவ தலையில நச்சு நச்சுன்னு குத்தி ரத்தம் ஒழுகவிட்டான்.

அவ கத்திக் கதறி ஊர்ச்சாமி பேரையெல்லாம் கூப்பிட்டு அழுதுபார்த்தா, ஒரு சாமியும் வரல, உண்மையாவே செத்துப்போனா” (2006, ப. 1) இவ்வாறு சொர்ணவள்ளியை வன்புணர்ச்சி செய்ததுடன் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள பாதிப்பிற்குள்ளான பெண்ணையே கொலை செய்வதாக நாவல் பதிவுசெய்கிறது.

அவளை முடிந்தளவு பழிவாங்கலுக்குட்படுத்திவிட்டு பஞ்சாயத்தைக் கூட்டி மண உறவு கேட்கும் பொழுது அதற்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் கருவாச்சி அமைதியாக நிற்கிறாள். சாமியிடம் பூப்போட்டு உத்தரவு கேட்கப்படுகிறது. “மஞ்சப்பூவக் காமிச்சு சாமிகூட நம்மபொழப்புல சாம்பலடிச்சிருச்சே மகளே” என்று பெரியமூக்கி சாமியின் உத்தரவை எண்ணி அழுது புலம்புகிறாள். இங்கு பெண்ணின் விருப்பத்தைக் கேட்பது அவசியப்படாத ஒன்றாகக் கட்டமைக்கப்படுகிறது.

கட்டையனது கொடுமைகளால் மன அழுத்தத்திற்கு உள்ளான கருவாச்சியின் அவல வாழ்வியலை உடனிருந்தவர்கள் புரிந்துகொள்ளாமல் அவளுக்கு மந்திரிச்சி

விடுகின்றனர். கணவனின் சித்ரவதைகளைத் தாங்கிக் கொண்டு வாழ்தல்தான் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையாக நோக்கப்படுவதை இது வெளிப்படுத்துகிறது. சக பெண்களும் கூட இதைப் புரிந்து கொண்டு ஆணாதிக்கத்தின் அரசியலை எதிர்க்காமல் விலகி நிற்பது ஆணாதிக்கப் பண்பாட்டை மேலும் வளப்படுத்துகிறது என்பதை,

"இச்சமூக அமைப்பு குலையாமல் இன்று வரை நீடிப்பதற்குப் பெண்ணே காரணமாக இருக்கிறாள்" (2010, ப. 158)

என்ற ஜமாலனின் கருத்துவழி ஆணாதிக்கச் சமூகத்தைத் தலைமுறைகளுக்கு பகிர்ந்தளிப்பதில் காவலாளியாக பெண் நியமிக்கப்பட்டிருக்கிறாள் எனப் புரிந்துணரப்படுகிறது.

முக்கியமாக, மணமுறிவு ஏற்படும் போது கருவாச்சி தாலியைக் கழற்றித் தர மறுக்கிறாள். ஏனென்றால் தாலிதான் திருமணமான பெண்களுக்கான அங்கீகாரமாக இந்துப் பண்பாடு வலியுறுத்துகிறது. இதைப் பெண் சமூகமும் எவ்விதக் கேள்வியுமின்றி ஆணாதிக்கத்தின் வதைகளை ஏற்றுக்கொண்டு தாலியை தனது உரிமையாக நிலைநாட்டுகின்றனர். பெண்களைச் சுதந்திரமாக இயங்கவிடாமல் தடுக்கும் காரணிகளில் முக்கியமான ஒன்று தாலி. அதன்மீதான சமூகப் பண்பாட்டுக் கட்டமைப்பைத் துறக்கும் போது ஆணாதிக்கம் பெண்களை அவதூறுகளால் அவளது இருப்பை நிலைகுலையச் செய்கின்றது. கருவாச்சி தாலியைத் துறக்க விருப்பமில்லை என்றாலும் கட்டையனைத் துறக்க முற்படுகிறாள். இதை,

“ஏண்டி! தாலி கழுத்தில கெடந்தா என்னைக்கிருந்தாலும் ஒன் புருசன் ஒன் கவுட்டுக்குள்ள வந்திருவான்னு பாக்கிறயா? கத்துறான் கட்டையன்.

இல்ல, இந்த சென்மத்துல நீ எனக்குப் புருசனுமில்ல இந்த பூமியில பெறந்த எந்த ஆம்பளையும் எனக்கு புருசனாகப் போறதுமில்ல.

பொழச்சிருவியாடி இந்த பூமியில...... ஆம்பள தொண இல்லாம?

பொழைக்கிறேன்..... பொழைச்சுக் காமிக்கிறேன்.

பந்தயம் போடுறியா? செயிச்சுருவியா?

செயிக்கிறேனோ இல்லையோ.... நான் தோக்கமாட்டேன் மாமா? ஊரே அருளேறி நிக்கிது. ஆம்பளைக பொம்பளைக கண்ணுல கண்ணீரா முட்டுது.” (க.கா. 51-52).

இவ்வாறு கருவாச்சியின் கலகக் குரல் வெளிப்படுவதை நாவல் பதிவுசெய்கிறது. தான் பட்ட கொடுமைகளைக் கூட சொல்ல மறுத்தவள் இப்போது தன் கணவனையே எதிர்த்து சவால் விடுவதும் கருவாச்சி தனக்கு துணையாக இனி எந்த ஆணும்

தேவையில்லை என்று கூறுவதன்வழி ஆணாதிக்க வர்க்கத்தையே துறக்க நினைக்கிறாள் என்பதும் கவனிக்கத்தக்கது. இது,

"ஒவ்வொரு பெண்ணிடமும் உள்ள குரல் அவளுடையதாக மட்டும் இல்லை. அது அவளது மனதின் ஆழ்ந்த அடுக்குகளிலிருந்து பீறிட்டு வருகிறது. அவள் ஒரு சமயம் கேட்ட புராதனமான பாட்டின் எதிரொலியாக அவளது சொந்தப் பேச்சு வருகிறது. சுருங்கச் சொன்னால் அது தாயின் குரலாகும்." (2011, ப. 80) என்று ஹெலன் சீக்ஷு கருத்துடன் பொருந்தி நிற்பதைக் காணமுடிகிறது.

பொருளாதார மேம்பாட்டை விரும்பாத ஆணாதிக்க மனம்

கருவாச்சி கட்டையனைத் துறந்த பிறகு தனித்து வாழ முற்படுகிறாள். ஆனால் கட்டையனும் அவனுடைய கையாட்களும் அவள் செய்யும் தொழிலுக்குத் தீங்கு விளைவிக்கின்றனர். தனது நிலத்தில் விவசாயம் செய்ய உழவு ஓட்ட கருவாச்சியும் பெரியமூக்கியும் உழவு ஓட்டுபவர்களை அழைக்கும்போது யாரும் உழவு ஓட்டச் செல்லக் கூடாது எனக் கட்டையன் மிரட்டுகிறான். இறுதியாக, வாய்பேச இயலாதவனையும் வெளியூரைச் சேர்ந்த தன் உறவுக்காரன் ஒருவனையும் கெஞ்சி அழைத்துவந்து உழவு ஓட்டுகிறாள் பெரியமூக்கி. இதை அறிந்த கட்டயனும் அவனது ஆட்களும் உழவு ஓட்டுபவர்களிடம் வம்பிழுத்து உழவு ஓட்டி முடிக்கும் முன்னே அதைத் தடுக்கின்றனர். உழவு ஓட்டாத மீதி நிலத்தை பெரியமூக்கி தன் ஒற்றை பசுமாட்டை ஒருபக்கமும், கருவாச்சி மறுபக்கமும் நின்று கலப்பையை இழுக்க பெரியமூக்கி உழவு ஓட்டுகிறாள். இவ்வாறு பெண் பொருளாதார வளத்தை நோக்கி நகரும் போது அதை ஆணாதிக்கம் முறியடிக்க முற்படுகிறது. பெண்ணிடம் பொருளாதாரம் வளரும்போது சுயமரியாதையையும் உரிமையையும் நோக்கி நகர ஆரம்பிக்கின்றனர். சுயமுடிவுகளைப் பெண்கள் எடுக்கும் திறனும் இதில் இணைந்துகொள்வதால் ஆணாதிக்கம் அதை ஒழித்துக்கட்டுவதில் தீவிரமாகச் செயல்படுகிறது. எங்கெல்ஸ் கருத்தை விளக்கும் பி. இரயாகரன்,

"பெண்ணைச் சமூக உழைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்ட போக்கு (பெண்ணின் உழைப்பு மூலதனத்துக்கே உரிய உபரி பெறுமானத்தை இழந்தது) என்பது, பெண்ணைச் சமூக வாழ்க்கையிலிருந்து படிப்படியாக அகற்றியதில் வெற்றி கண்டது, பெண்ணைச் சமூக உழைப்பில் இருந்து அகற்றிய சமூகம் பெண்ணைப் பிள்ளை பெறும் கூலி இயந்திரமாக, ஆணின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யும் இயந்திரப் பொம்மையாக, ஆணுக்குச் சேவை செய்யும் அடிமையாகக் கேவலப்படுத்தியது என்பது, பெண்ணின் வரலாற்றுத் தோல்வியுடன் கூடிய அடிமைத்தனமாகும்." (2001, ப. 17) என்று உரைப்பதன் வழி பெண்ணை சமூக உழைப்பிலிருந்து அந்நியப்படுத்தும் வேலையை ஆணாதிக்கச் சமூகம் தொடர்ந்து நிறைவேற்றி வருவதை உணர்த்துகிறது.

இதேபோல், கண்ணாடி வளையல் வியாபாரம் செய்யும் சுப்பஞ்செட்டியாருக்கு இரு மகள்கள் கனகாம்பரம், பவளம். கனகாம்பரத்தைத் தன் உறவுக்காரன் முத்துகாமுவிற்கு திருமணம் செய்து வைக்க அவனுக்கு வரதட்சணையாக அவன் கேட்டுக் கொண்டபடி ஒரு பெட்டிக்கடையும், வைர மோதிரமும் தருவதாக உறுதியளிக்கிறார். ஆனால் திருமணம் முடிந்து நான்கு வருடங்கள் ஆகியும் சுப்பஞ்செட்டியாரால் வைர மோதிரம் தரமுடியவில்லை. இந்நிலையில் கனகத்தை அடித்து விரட்டி விடுகிறான் முத்துகாமு. அவள் தன் தகப்பன் வீட்டுக்கு வந்து விடுகிறாள்.

இவ்வாறு பெண் பொருளாகப் பார்க்கப்படுவதும் பொருளாதாரத்தை நோக்கி நகர விடாது பார்த்துக் கொள்ளவதும் ஆணாதிக்கப் பண்பாட்டின் அடையாளமாக உள்ளது. தாய்வழிச் சமூகம், தந்தைவழிச் சமூகமாக உருமாறியபோது, பெண்ணின் நிலை என்பது, "வீட்டு நிர்வாகம் தனது பொதுத் தன்மையை இழந்தது. அது சமூகத்தின் அக்கறையைப் பெற்ற விவகாரமாக இனிமேலும் இருக்கவில்லை. அது தனிப்பட்ட சேவை ஆகிவிட்டது. மனைவி முதல் வீட்டு வேலைக்காரியாக மாறினாள்" (2001, ப. 17) என்ற ஏங்கெல்ஸின் பார்வை சிந்திக்கத்தக்கது. பொருளாதாரத்தில் தலையீடு இல்லாத பணிகளை பெண்களின்மீது திணித்து பொருளாதாரத்தைப் பெற வேண்டுமானால் அது ஆணிடம் இருந்துதான் வரவேண்டும் என்ற கட்டமைப்பு பெண்ணின் இருப்பு சமூகத்திலிருந்து மறுதலிக்கப்படுவதாய் உள்ளது.

எதார்த்தப் புனைவில் எழுத்தாளனின் அரசியல்

எதார்த்தம் என்பது பன்முகத்தன்மை கொண்டது. ஒரு எழுத்தாளன் அதில் எதைத் தேர்ந்தெடுக்கிறான் என்பதுதான் அவனது அரசியலாகும். தான் அனுபவித்த வலியைப் பதிவுசெய்வது ஒருவிதம், தான் கேட்ட, அனுபவிக்காத ஒன்றை பதிவாக்குவது மற்றொரு விதம். இன்னும் கூட பொதுபுத்தி மனநிலையிலிருந்து பிரதியைக் கட்டமைப்பதையும் இதில் இணைத்துக்கொள்ளலாம். அதேபோல் எழுத்தாளன் எதை எதார்த்தம் என்று புரிந்து கொண்டிருக்கிறானோ அது இல்லாமல் கூட போயிருக்கலாம். எதார்த்தம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் மாறுபடுகிறது. அதை எழுத்தாக்கும் போது எழுத்தாளன் தனது சிந்தனைக்குட்பட்ட எதார்த்தத்தையும் கலந்து விடுகிறான்.

கருவாச்சி காவியத்தின் முதன்மைக் கதாபாத்திரமான கருவாச்சியைப் பற்றி, “அந்த வாழ்வுக்குள் இல்லாத எதையும் படைப்புக்குள் கொண்டுவரக்கூடாது என்பதில் கவனத்தோடு நாவலாசிரியர் இருந்திருக்கிறார். வாழ்வின் இருப்பு வேறு, எதிர்ப்பார்ப்பு வேறு, எதிர்ப்பார்ப்பை இருப்புக்குள் திணிப்பது காலமயக்கம் என்ற கடுங்குற்றத்துக்கு ஆளாகிவிடும். வறண்ட நிலத்தின் ஒரு விவசாய வெளியில் நூற்றாண்டுகளாய் வாழ்ந்த வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து கழித்தவள் கருவாச்சி. அவளைத் தீவிரப்படுத்துவதோ, புரட்சிக்கோலம் பூசுவதோ சத்தியத்தின் கோடுகளைத் தாண்டுவதாகும். அவள்

அவளாகவே வாழ்ந்திருக்கிறாள்" இவ்வாறு படைப்பாளிக்கு அதில் பங்கில்லை என்று கூறுப்படுகிறது.

"கருவாச்சி என்பாள் ஒரு கற்பனைப் பாத்திரம் அல்லள். கருவாச்சியின் முற்பகுதி வாழ்க்கை எங்கள் குடும்பங்களுக்குள் நிகழ்ந்த நிஜம். பிற்பகுதி வாழ்க்கை எங்கள் கிராம வெளிகளில் வெவ்வேறு பெண்கள் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்து தொலைத்த வாழ்க்கை" (க.கா., பாயிரம்) என்று தன் அனுபவத்திலிருந்து கருவாச்சியைக் கட்டமைத்திருப்பதாக பதிவு செய்கிறார் வைரமுத்து.

இக்காவியத்தில் கருவாச்சி, கருவாச்சியின் தாய் பெரியமூக்கி, சொர்ணக்கிளி, வளவிக்காரச் சுப்பஞ்செட்டியாரின் பெண்கள் கனகாம்பரம், பவளம், கொண்ணவாயன் காதலி அய்யக்கா போன்ற கதாபாத்திரங்கள் ஆணாதிக்கத்தின் அழிச்சாட்டியங்களால் பாதிக்கப்பட்டவர்களாய் அடையாளப்படுகின்றனர்.

அதேசமயம், நாவலின் இறுதியில் கட்டையன் நோய்வாய்ப்பட்டு கருவாச்சியிடம் தஞ்சம் புகுகிறான். அதைக் கருவாச்சி அனுமதித்து அவனைப் பார்த்துக்கொள்வதாக நாவல் பதிவுசெய்கிறது. பெண் எவ்வளவுதான் ஆணைத் துறந்து தனித்து வாழ்ந்தாலும் இறுதியில் ஆணை அரவணைப்பவளாகப் பெண் இருக்கிறாள். இது அவளது இரக்க குணமாக நோக்கினாலும் இறுதியில் பெண் ஆணைச் சார்ந்துதான் வாழ வேண்டும் என்ற ஆணாதிக்க வடிவத்தின் கூறை வைரமுத்து வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

முடிவுரை

கருவாச்சி காவியம் நாவலில் இடம்பெற்றுள்ள கருவாச்சி கதாபாத்திரம் ஆணாதிக்க அதிகாரத்தால் அக, புற வெளிகள் சிதைக்கப்பட்டாலும் அதற்கு எதிரான கலகக் குரலை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. பெண் பொருளாதார வளத்திற்குள் நுழையவிடமால் ஆணாதிக்கம் பார்த்துக்கொள்வதை கருவாச்சி மேற்கொள்ளும் தொழில்களை முடக்குவதன்வழி அறியமுடிகிறது. பெண் ஆணைச் சார்ந்துதான் வாழ வேண்டும் என்ற ஆணாதிக்கச் சிந்தனையை படைப்பாளி கட்டையன் நோய்வாய்ப்பட்டு கருவாச்சியிடம் வருவதும் அவள் அவனை கவனித்துக்கொள்வதன் வழியும் நிறைவேற்றியுள்ளார்.

துணைநின்ற நூல்கள்

1. இரயாகரன், பி., 2001. ஆணாதிக்கமும் பெண்ணியமும், (முதல் பதிப்பு). சென்னை: கீழைக்காற்று வெளியீட்டகம்.
2. சாரா காம்பிள் – டோரில் மோய், 2011, பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், ராஜ்கௌதமன் (மொ.பெ),கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.

3. மங்கை, அ., பெண்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள், rekupthi.blogspot.com/2006/07/blog-post.htm|?m=1, 2006.

4. வைரமுத்து, 2006, கருவாச்சி காவியம், பதினாறாம் பதிப்பு, சென்னை: சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்.

5. ஜமாலன். 2010. நவீன தொன்மங்களும் நாடோடிக் குறிப்புகளும், (முதல் பதிப்பு). சென்னை: புலம் வெளியீடு.

Bibliography

1. Irayakaran, P., 2001. Patriarchy and Feminism, (First Edition). Chennai: East Wind Publishing.

2. Sarah Gamble – Doril Moy, 2011, Feminism History and Principles, Rajgauthaman (M.P), Coimbatore: Vidyal Publishing.

3. Mangai, A., Women are not born but created, rekupthi.blogspot.com/2006/07/blog-post.htm|?m=1, 2006.

4. Vairamuthu, 2006, Karuvachi Kaviyam, Sixteenth Edition, Chennai: Surya Literature (P) Lit.

5. Jamalan. 2010. Modern Myths and Folk References, (First Edition). Chennai: Pulam Publishing.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

ஐஸ்வர்யா.பொ, "கருவாச்சி காவியம் நாவலில் பெண்நிலையும் ஆண்மைய அதிகாரமும்" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 2, ஏப்ரல் 2025, பக். 8-16

Cite this Article in English

Iswarya.P, "Femininity and Masculine Authority in the Novel Karuvachi Kaviyam" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 2, April 2025, pp. 8-16

புறநானூறு காட்டும் இரவலர் நிலை

The State of Iravalar in Purananooru

மகாலட்சுமி.அ*, வெள்ளியங்கிரி.க*

*தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை.

Mahalakshmi.A*, Velliyangiri. K*

*Tamil Department, Thavathiru Santhalinga Adigalar Arts Science Tamil College, Perur, Coimbatore.

ORCID ID : https://orcid.org/0009-0000-5946-7818

DOI: 10.5281/zenodo.15309034

Abstract

Sangam Literature helps us to know more about the living style, habitats and culture of Sangam Age People. Sangam Literature is classified as Pattum Thogaiyum. The Books which belongs to the category called 'Thogai' is a collection of songs sang by many poets. The collection of eight books contains six Agam books, two Puram books and one book which is a mixture Agam and Puram. Purananooru is one among the two puram books. It has four hundred songs about puram. Purananooru well explains about the Heroism, Fame, Donation, War of Sangam Age People. Hence it is known as the Treasury of Historical events. This article 'The State of Iravalar in Purananooru' describes about the Meaning of the word 'Iravalar', Nature of Iravalar, Poverty of Iravalar, Difficulties faced by Iravalar in their path, Request for the needs, Presents received by Iravalar.

ஆய்வுச்சுருக்கம்

சங்ககால மக்களின் வாழ்வியலை அறியப் பெரிதும் உதவுன சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்கள் என்பவை பாட்டும் தொகையும் எனப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தொகை நூல்கள் என்பது பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். அவை அக நூல்கள் ஆறு, புற நூல்கள் இரண்டு, அகமும் புறமும் கலந்த நூல் ஒன்று என்று எட்டு நூல்களைக் கொண்டு விளங்குகின்றன. புற நூல்கள் இரண்டனுள் ஒன்றாக விளங்குவது புறநானூறு. இஃது புறம் பற்றிய நானூறு பாடல்கள் கொண்டு சங்ககால மக்களின் வீரம், புகழ், கொடை, போர் முதலான செய்திகள் பலவற்றை அறிய

உதவும் வரலாற்றுப் பெட்டகமாக விளங்குகிறது. "புறநானூறு காட்டும் இரவலர்நிலை" என்னும் தலைப்பின் கீழ் இரவலர் என்னும் சொல் குறிக்கும் பொருள், இரவலரின் இயல்புகள், இரவலரின் வறுமை, செல்லும் வழியின் கொடுமை, வேண்டியது கேட்டல் , பெற்ற பரிசில்கள் போன்ற செய்திகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

Key Words : Iravalar, Nature, Poverty, Difficulties, Needs, Present, Purananooru, Sangam Literature, இரவலர், இயல்பு, வறுமை, கொடுமை, வேண்டியது, பரிசில், புறநானூறு, சங்க இலக்கியம்.

முன்னுரை

இரந்து செல்வோர் இரவலர் எனப்படுகின்றனர். 'இரவலன்' என்பதற்கு 'பரிசில் வேண்டி வருவோர்' என்று மெய்யப்பன் தமிழ் அகராதி (மெய்யப்பன் தமிழ் அகராதி, பக்.143) பொருள் தருகிறது. வறுமையுற்ற பாணர், பொருநர், கூத்தர், விறலியர், புலவர் போன்றோர் தங்கள் வறுமையை தீர்க்கும் பொருட்டோ, விரும்பியதை பெறும் பொருட்டோ வேந்தர்கள், குறுநிலத்தலைவர்கள், வள்ளல்கள் போன்ற செல்வந்தர்களிடம் பரிசில் வேண்டி இரந்து சென்ற காரணத்தினால் அவர்கள் இரவலர் எனப்படுகின்றனர்.

இரவலரின் இயல்புகள்

புறநானூற்றில் இரவலர் தாம் வறுமையுற்ற காலத்தும் தங்கள் நிலையிலிருந்து மாறாத தன்மை கொண்டவர்களாகவும் தங்களுக்கென சில அறநெறிகளை வகுத்துக் கொண்டும் வாழ்ந்து வந்துள்ளனர். புரவலர்களைப் பாடி, பரிசில் பெறச் சென்ற போதும் ஈயென கேட்காது "சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு" (திருக்குறள்-963) என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப வறுமையுற்ற போதும் தங்கள் உயர்வு காத்தும் வாழ்ந்துள்ளனர் என்பதை(புறம்.154) புறநானூற்றின் நூற்று ஐம்பத்து நான்காம் பாடல் அறிவுறுத்துகிறது. புரவலர்களிடம் பரிசில் பெற வேண்டி பொய்யாக புகழ்ந்து பாடாது உண்மையை மட்டும் கூறும் தன்மையராகவும் இருந்துள்ளனர் என்பதை (புறம்.139) புறநானூற்றின் நூற்று முப்பத்தி ஒண்பதாம் பாடல் அறிவுறுத்துகிறது. மேலும் பரிசில் வேண்டிச் சென்ற காலங்களில் "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்" (கலித்தொகை 133) என்னும் முறைமை அறியாத மன்னர்கள் உயர் செல்வம் கொண்டவர்களாக, மிகுதியான பொன்னைப் பரிசிலாக வழங்குபவர்களாக, அருகாமை நாட்டினராக இருப்பினும் அவர்களை விடுத்து, தங்கள் பாடு அறிந்து ஒழுவோர் சிறு மலையின் தலைவர்களாக இருப்பினும் அவர்களை நாடிச் சென்றுள்ளனர். இதனை,

"சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னாரே " (புறம்.197, 13-14)

என்னும் புறநானூற்று பாடல் அடிகள் மூலம் அறியமுடிகிறது. அவ்வாறு முறைமையோடு

பெற்ற பரிசில்கள் சிறிதாக இருப்பினும் தனக்கென வைத்து கொள்ளாது மன்றம் என்னும் பொதுவிடத்தில் வைத்து தம் சுற்றத்தாரோடு கூடி "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" (திருக்குறள்.322) என்னும் வள்ளுவர் வழியில் நின்று தாம் பெற்ற பரிசிலை ஏனையோருக்கும் பகுத்துக் கொடுத்து சிறந்த அறம் போற்றி வாழ்ந்துள்ளனர் என்பதை

"குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்" (புறம். 34,11-14)

என்னும் புறநானூற்று பாடலடிகள் வழி அறியமுடிகிறது. இதன்மூலம் இரவலர் வறுமையில் உயர்வு காத்தல், முறைமை அறிந்து பொருள் பெறுதல், பொய் கூறாது இருத்தல், பகுத்துண்டு வாழ்தல் போன்ற இயல்பினராக வாழ்ந்துள்ளனர் என்பது அறியவருகிறது.

இரவலரின் வறுமை

மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்பவை மூன்று. அவை உணவு, உடை, உறைவிடம். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு. மனித உடலானது அவ்வுணவால் ஆனது. இதனை "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" (புறம்.18) என்கிறது புறநானூறு. அத்தகைய உணவின்றி இரவலர்கள் பலநாட்கள் இருந்துள்ளனர். கடும்பசியினால் உடல் மெலிந்து வயிற்றில் கோடுகளோடு காணப்பட்டுள்ளனர். இதனை,

" பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் . . . . " (புறம்.160,4-6)

என்னும் பெருஞ்சித்திரனார் பாடலடிகள் மூலம் அறியலாம்.

மனிதர்களுக்கு உணவினை அடுத்து அடிப்படைத் தேவையாக அமைவது உடை. அத்தகைய உடை ஒருநாள் உடுத்திய பின் மறுநாள் உடுத்த வேறு உடையில்லாததால் இரவலர்கள் பலநாட்கள் ஒரே உடையை உடுத்தியுள்ளனர். அவ்வாறு உடுத்தியதால் அவ்வாடைகளில் பல கிழிசல்கள் ஏற்பட்டன. அக்கிழிசல்களைப் பல முறை தைத்துப் பயன்படுத்தி வந்துள்ளனர். தூய்மை செய்யப்படாத ஆடைகளில் அழுக்கு மற்றும் பிசுபிசுப்புத்தன்மைகாரணமாகபேன்கள்(சீலைப்பேன்)தோன்றும்.அவைஅழுக்குகளை உணவாக உட்கொண்டு வாழ்வன. எனவே, அவர்களின் ஆடைகளில் காணப்படும் நீங்காத அழுக்கு காரணமாக பேன்கள் தங்கி முட்டைகள் (ஈர்) இட்டுள்ளன. அவை

தன் ஈர்கூட்டங்களோடு சேர்ந்து இரவலரின் ஆடையிலுள்ள தையல் இடுக்குகளைப் பற்றிக் கொண்டு நீங்காது தரும் துன்பத்தை அவர்கள் பகை என்று கூறியுள்ளதை

“இழைவலந்த பஃறுன்னத்
திடைப்புரைப்பற்றிப் பிணிவிடாஅ
ஈர்க்குழாத்தோ டிறைகூர்ந்த
பேஎற்பகையென வொன்றென்கோ ” (புறம். 136, 2-5)

என்னும் புறநானூற்றுப் அடிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும் பொருள் இல்லாத காரணத்தால் உணவு சமைக்கும் அடுக்களையைப் பலநாட்கள் பயன்படுத்தாது வைத்துள்ளனர். அவ்விடத்தில் ஒளி மற்றும் வெம்மை இல்லாததை அறிந்த நாய் ஒன்று தங்கி குட்டிகளை ஈன்றுள்ளது. தற்போது உணவற்றுப் போனதால் குட்டிகளுக்கு பால் ஊட்ட இயலாது வற்றிய முலையோடு இருந்த பாணன் வீட்டு நாயின் நிலையை

“கறவாப் பால் முலை கவர்தல் நோனாது
புனிற்று நாய் குரைக்கும் புல்லென அட்டில் ” (சிறு. 31-33)

என்னும் சிறுபாணாற்றுப்படை பாடலடிகள் உணர்த்துகின்றன. இச்செய்தியை,

“ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப் ” (புறம்.164,1-2)

என்னும் புறநானூற்று பாடல் உறுதி செய்கிறது. இரவலரின் வீட்டிலுள்ள அடுக்களைப் பலநாட்களாக சமைக்காது போனதால், அடுப்பு அதன் தொழில் சமைத்தல் என்பதை மறந்து போனது. நிழல் மற்றும் ஈரப்பதம் நிறைந்த இடங்களில் விளையும் காளான் அவ்விடத்தே முளைத்துள்ளது. இவ்வாறு பரிசில் வேண்டிச் செல்லும் இரவலர்கள் தங்கள் உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றில் ஏற்பட்ட துன்பங்களை புரவலர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

செல்லும் வழியின் கொடுமை

இரவலர்கள் தங்கள் வறுமையைத் தீர்க்கும் பொருட்டு புரவலர்களைத் தேடிச் செல்வர். அவ்வாறு செல்லுமிடத்து வறுமை தீரும் வரை நிலம் விட்டு நிலம் சென்று கொண்டிருப்பர். பாணர், விறலியர் போன்றோர் தாம் செல்லுமிடங்களுக்குத் தங்கள் இசைக்கருவிகளையும் சுமந்து செல்வது வழக்கம். அச்சுமைகளை நெடுந்தொலைவிற்குத் தோல்களில் சுமந்து வந்ததால் இளையோரின் தோல்களில் தழும்புகள் தோன்றியுள்ளன என்பதை “சுவலழுந்தப் பலகாய” (புறம்.139) என்னும் புறநானூற்றுப் பாடல் அடி விளக்கியுள்ளது. மேலும் நெடுந்தொலைவு நடந்து வந்ததால் மென்மையான அடிகளை உடைய விறலியரின் பாதங்களில் ஏற்பட்ட வருத்தத்தை “அடிவருந்த நெடிதேறிய”

(புறம்.139) என்னும் புறநானூற்றுப் பாடலடியால் அறியமுடிகிறது. வெப்பம் மிகுந்த சுரத்தின்கண் ஆரலைக் கள்வர்கள் வாழ்வர். அவர்களது தொழில் வழியில் செல்வோரின் பொருட்களைப் கவர்தல். அவர்கள் அவ்வழியில் செல்லும் இரவலரின் வறுமைநிலை அறிந்த போதும் 'இருப்பதை கொடு' என்று அவர்களது பொருட்களைக் குரங்குகள் போல் பறித்து சென்றுள்ளனர். இதனை தங்களுக்கு உள்ள பகைகளில் ஒன்றாய் இரவலர்கள் தெரியப்படுத்தியுள்ளதை,

" அன்னதன்மையு மறிந்தீயார்
நின்னதுதாவென நிலைதளர
மரம்பிறங்கிய நளிச்சிலம்பிற்
குரங்கன்னபுன் குறுங்கூளியர் " (புறம்.136,10-13)

என்னும் பாலடிகள் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு செல்லும் வழியிடத்தே வெப்பம், சுமை மற்றும் ஆரலைக் கள்வர்கள் போன்ற இன்னல்களால் இரவலர்களின் வருத்தம் மிகுந்துள்ள செய்தியைப் புறநானூற்றுப் பாடல்கள் பதிவுசெய்துள்ளன.

வேண்டியது கேட்டல்

இரவலர்கள் பரிசில் வேண்டிச் செல்லும்பொழுது தங்கள் வறுமை நிலை கூறி அதனை தீர்க்குமாறு புரவலரை வேண்டுவர். சிலர் புரவலரைப் புகழ்ந்து பாடி, அவர் மனம் மகிழ்ந்து தரும் பொருட்களைப் பெற்றுத் திரும்புவர். இரவலர் சிலர் இன்ன பொருள் தருவாயாக என்று வேண்டிப் பெறுதலும் உண்டு. அவ்வாறு இரவல் வேண்டிச் சென்ற ஔவையார், நாஞ்சில் வள்ளுவன் என்னும் தலைவனிடம் படப்பையில் பறித்த கீரைகளோடு சமைக்க அரிசி வேண்டியுள்ளார். அத்தலைவன் களிறு வழங்கி சிறப்பித்துள்ளான். அவ்வாறு அரிசி கேட்டமைக்கு களிறு வழங்கிய அவனது வரிசையறியா கொடைமடத்தை வியந்து கூறியுள்ளார் என்பதை (புறம்.140) புறநானூற்றின் நூற்று நாற்பதாம் பாடல் விளக்கியுள்ளது. மேலும், இரவல் பெறுவோர் மன்னனை அவையில் கண்டு தங்கள் நிலையைக் கூறி பரிசில் வேண்டுவது வழக்கம். ஆனால் தம் சுற்றத்தாரின் பசித்துன்ப மிகுதி காரணமாக இருநிலமும் போர் புரிவதற்கு முன் தன் வறுமையை தீர்க்குமாறு வேண்டியுள்ளனர். இதனை,

" இருநில மிளிர்ந்திசி னாஅங் கொருநாள்
அருஞ்சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே " (புறம்.139, 13-15)

என்னும் புறநானூற்று பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. இரவலர்கள், புரவலர்களிடம் விரும்பியவற்றை வேண்டியுள்ளனர் என்னும் செய்திகள் புலப்படுகின்றன. அவ்வாறு வேண்டும் பொழுதும் தங்கள் வறுமையை தீர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு,

வேண்டியதற்கு மிகுதியான பொருள் கிடைப்பினும் அவ்வாறு வழங்கிய புரவலனின் வரிசையறியாத் தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ள செய்திகளையும் அறியமுடிகிறது.

பரிசில்கள்

இரவல் வேண்டிச் செல்வோர் பல்வேறு பொருட்களைப் பரிசிலாகப் பெற்றுள்ளனர். செல்வம் மிக்க தலைவர்கள் "இரந்தோர்க் கீவது முடையோர் கடனே" (நறுந்தொகை 58) என்னும் அறக்கருத்திற்கேற்ப வறுமையினால் குடல் வாடி, உணவு மறந்து வந்த இரவர்கள் குளிரும்படி பொன்னாலான கலங்களில் மணமுள்ள தாளிப்புகள் சேர்த்த நெய்யுடன் கூடிய சோறு படைத்துள்ளனர். சிலர் தன்னைப் பாடிப் புகழ்ந்த இரவலருக்கு தான் வேட்டையாடிய மானின் கொழுப்பு மிக்க இறைச்சியும், பசுவின் நெய்யைக் காய்ச்சியது போன்ற அடர்ந்த கல்லையும் தந்து பசியைப் போக்கியபின் தன் மலையிடத்தே விளைந்த பல் மணிகளையும் பரிசாக வழங்கியுள்ளானர். இதனை,

" தானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோ
டானுருக் கன்ன வேரியை நல்கி " (புறம். 152, 26-27)

என்னும் அடிகள் வழி அறியமுடிகிறது. உணவுப்பொருட்களோடு பிற பொருட்களையும் பரிசிலாக பெற்றுள்ளனர் என்பதை,

" பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ " (புறம். 141,1-3)

என்னும் அடிகள் மூலம் இரவலர்கள் பொன்னாலான அணிகள், தேர், குதிரை, யானை போன்ற பல்வேறு பொருட்களை பரிசிலாகப் பெற்றுள்ளனர் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்ள முடிகிறது.

முடிவுரை

சங்ககால மக்கள், மன்னர்கள், மறவர்கள், இரவலர்கள் போன்றோரின் புறம் சார்ந்த வாழ்வியலை உணர்த்தும் புறநானூற்றின் வழி வறுமையினால் இரவலர்கள் எதிர்கொண்ட துன்பங்கள், புரவலர்களை காணச் சென்ற வழியின் இடர்பாடுகள், தேவைப்படுவனவற்றை வேண்டிப் பெறுதல், பெற்ற பரிசில்கள் போன்றவற்றை அறியமுடிகிறது. பாணர்களின் வாழ்வியல் வறுமை மிகுந்து இருந்ததைச் சங்க இலக்கியங்கள் அவர்கள் வீட்டின் அடுப்பில் நாய் தூங்கிய நிலை, காளான் முளைத்திருந்த நிலை ஆகியவற்றை எடுத்துக் கூறுவதன் மூலம் அறியமுடிகின்றது. எவ்வளவு வறுமையுடன் இருப்பினும் இரவலர்கள் தங்களை மதித்து முறையறிந்து ஈவோரிடமே சென்றுள்ளனர். மிகுந்த பொருள் கிடைக்கும் என்பதற்காக மதியாதாரிடம் இரந்து நிற்காத மேன்மையான வாழ்வியலை இரவலர்கள் கடை பிடித்தனர் என்பது

போற்றத்தக்க பண்பாக அமைந்துள்ளது.

1. புறநானூறு , சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி-6, நான்காம் பதிப்பு, ஜீலை 1960.
2. சிறுபாணாற்றுப்படை , சாரதா பதிப்பகம், சென்னை-14, மூன்றாம் பதிப்பு, 2014.
3. திருக்குறள் , மனோரா பப்ளிகேஷன்ஸ், சென்னை-1, முதல் பதிப்பு, 2009.
4. நல்வழி நறுந்தொகை, சாரதா பதிப்பகம், சென்னை-14, பதினொறாம் பதிப்பு, 2018
5. மெய்யப்பன் தமிழ் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-4, ஐந்தாம் பதிப்பு, மே 2024.
6. கலித்தொகை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18, ஐந்தாம் பதிப்பு, மார்ச்சு 1958.

References

1. Purananooru, Saiva Sidhantha Noorpadhippu Kazhagam, Tirunelveli-6, 4th Edition, July 1960.
2. Sirupanaatruppadai, Saradha Padhipagam, Chennai-14, 3rd Edition, 2014.
3. Thirukkural, Manora Publication, Chennai-1,1st Edition, 2009.
4. Nalvazhi Narunthogai, Saradha Padhipagam, Chennai-14, 11th Edition, 2018
5. Meiyappan Tamil Dictionary, Manivasagar Padhipagam, Chennai-4, 5th Edition, May 2024.
6. Kalithogai, Saiva Sidhantha Noorpadhipu kazhakagam, Chennai-1, 5th Edition, May 1958.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

மகாலட்சுமி.அ, வெள்ளியங்கிரி.க, "புறநானூறு காட்டும் இரவலர் நிலை" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 2, ஏப்ரல் 2025, பக். 17-23

Cite this Article in English

Mahalakshmi.A, Velliyangiri. K, "The State of Iravalar in Purananooru" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 2, April 2025, pp. 17-23

திருக்குறளில் அஃறிணை முதற்பெயர்கள்

Akrinai first names in the Thirukkural

சுகந்தி.சு*, கண்ணன்.அர*

*தமிழ்த்துறை, ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை

Suganthi.S*, Kannan. R*

*Department of Tamil, R.V.S. College of Arts and Sciences, Sulur, Coimbatore

ORCID ID: https://orcid.org/0000–0003–1098–2327

DOI : 10.5281/zenodo.15309062

Abstract

The Thirukkural contains ideas that are relevant to the present day. Numerous studies are being conducted on the Thirukkural. The moral values it provides are famous worldwide. The Sangam period identified human life by emphasizing nature. The characteristics of natural objects penetrating human feelings and being in harmony with it can be seen in these literatures. It is seen that the human being, who is identified as the supreme being, lives a life in harmony with the divine, through commentary and directly. In this way, it can be seen that the divine beings found in the Sangam songs are identified as instruments for teaching human morality. In this way, this article focuses on explaining the way in which the divine beings identified in the Thirukkural are recorded.

ஆய்வுச் சுருக்கம்

திருக்குறள் தற்காலத்திற்கும் பொருந்தி வரக்கூடிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது. திருக்குறளின் மீது எண்ணற்ற ஆய்வுகளும் நிகழ்த்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அது தரும் அறக்கருத்துக்கள் உலகளாவிய அளவில் புகழ் பெற்றவையாகத் திகழ்கின்றன. சங்க காலம் இயற்கையை முன்னிறுத்தி மனித வாழ்வியலை அடையாளப்படுத்தியது. இயற்கைப் பொருள்கள் மனித உணர்வுகளுக்குள் ஊடுருவி அதனோடு ஒத்திசைவு கொண்டிருக்கும் தன்மைகளை இவ்விலக்கியங்களில் காணமுடிகிறது. உயர்திணை என்று அடையாளப்படுத்தப்படுகின்ற மனிதன் அஃறிணையோடு இயைந்த வாழ்வினைக் கொண்டிருப்பதை வர்ணனை மூலமும் நேரடியாகவும் எடுத்தாளும் சூழல் காணப்படுகிறது. அவ்வகையில் சங்கப் பாடல்களில் காணலாகும் அஃறிணைகள் திருக்குறளில் பயன்படுத்தப்படும் அஃறிணைகள் மனித

அறத்தைப் போதிக்கும் கருவிகளாக அடையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. அவ்வகையில் திருக்குறளில் அடையாளப்படுத்தப்படும் அஃறிணை உயிரினங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள விதத்தை எடுத்துரைப்பதை இக்கட்டுரை மையமாகக் கொண்டிருக்கிறது.

Key words: திருக்குறள், பெரும்பாணாற்றுப்படை, குறுந்தொகை, மயில், யானை, காக்கை

முன்னுரை

பண்டைத் தமிழ் மக்கள் இயற்கைச் சூழலில் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு நன்கு அறிமுகமாகியிருந்த இயற்கைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு சீரிய சிந்தனைகளைச் சிறப்பாகக் கூறுவதன் வாயிலாக அவர்களைச் செந்நெறியில் செலுத்த முடியும் என்று திருவள்ளுவர் நம்பினார். தொல்காப்பியர் அஃறிணைக்கு ஒரு மரபு அமைத்திருக்கிறார். அதற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் வள்ளுவர் அஃறிணைப் பெயர்களையும் உவமையாக எடுத்தாண்டுள்ளார். பறவை, விலங்கு முதலிய அஃறிணை முதல்பெயர்களைக் கையாண்டு கூறியுள்ள குறட்பாக்களை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

பறவை முதற்பெயர் உவமைகள்

'பறவையைக் கண்டு விமானம் படைத்தான்' என்ற சொல்லுக்குக் காரணமான பறவை இனத்திடமும் சில நற்பண்புகளும் இருக்கின்றன. ஒவ்வோர் உயிரியின் செயல்பாட்டில் ஒரு திறம் அமைந்திருக்கின்றது. பறவை இனங்களுக்கே உரிய கூர்மையான பார்வை, உயரப்பறத்தல், எளிதாக இரை தேடுதல், அபாயத்தை உணர்தல் போன்ற தனித்தன்மையைக் கொண்டு விளங்கும். இப்பறவைகளை உவமையாகக் காட்டி வள்ளுவர் கருத்துக்களை விளக்குகிறார். தாழ்ந்த பொருளிலும் உயர்வானதையும், மதிப்பானதையும் உவமையாகக் கூறவேண்டும் ஒப்பிட வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். அதற்கு இணங்க வள்ளுவரும் அவ்வாறே உவமையைக் கூறுகிறார். சங்கப்பாடலான பெரும்பாணாற்றுப்படையில்,

"பழுமரந் தேரும் பறவை போல்" (பெரும்பாணாற்றுப்படை, பா.எ. 20)

எனும் தொடர் இடம் பெற்றுள்ளது. பழுத்த மரத்தைத் தேடித் திரியும் பறவைகளைப் போல பசி மிகுதியால் திரிகின்றனர் என்பது இதன் பொருளாகும்.

"பழுந்தேர் வாழ்க்கைப் பறவை போல" (மதுரைக்காஞ்சி, பா.எ. 576)

பழுமரமுள்ள இடந்தேடிச் சென்று அவற்றின் பழத்தையே ஆராய்ந்து கவர்ந்து நுகர்தலைத் தமக்குத் தொழிலாகவுடைய பறவையினம் போன்று,

“விசும்பாடு பறவை வீழ்பதிப் படர்” (குறிஞ்சிப்பாட்டு, பா.எ. 46)

விண்ணிற் பறக்கும் பறவைகள் எல்லாம் தாம் விரும்பியுறையும் குடம்பைகளிலே சென்று அடங்குமாம்.

“பறவை படிவன" (நெடுநல்வாடை, பா. எ. 10)

பறவைகள் மரத்திலே தங்குவன காற்று மிகுதியால் நிலத்தே விழாநிற்பன எனவும் பல தொடர்கள் இடம் பெற்றிருப்பதனை அறியமுடிகிறது.

மனித அமைப்பில் புறத்தோற்றமாகிய உடம்பும் அதனை இயக்கும் உள்ளாற்றலாகிய உயிரும் தம்முள் கொண்டுள்ள தொடர்பினை விளக்குவதற்குப் பறவை உவமையினைப் பயன்படுத்தியுள்ளார். முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருந்து சிறுபறவை பருவம் வந்ததும் அதனை விடுத்து வெளியே பறந்து போதல் இயல்பானது.

உடம்புக்குள் இருந்த உயிரும் உரிய காலம் வந்ததும் அதனை விடுத்து வெளியேறுகிறது. எனவே, இவ்விரு காட்சிகளையும் இணைத்து வள்ளுவர் விளக்குகிறார். முட்டைக்கும் பறவைக்கும் உள்ள தொடர்புதான் உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவு என்று மெய்ப்பொருள் விளக்கம் தந்துள்ளார். முட்டையினை விட்டு சென்ற சிறுபறவை மீண்டும் அதற்குள் சேர்தல் இல்லை. அதுபோல, உடம்பினை விட்டுச் சென்ற உயிரும் மீண்டும் அதனுள் சேராது. நிலையாமையினை விளக்குவதற்குப் பறவை உவமை பாங்குறப் பயன்படுகிறது. இதனை,

“குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு” (திருக்குறள், 338)

தவ வேடத்தால் தன்னை மறைத்துக்கொண்டு தவத்திற்குப் பொருந்தாத செயல்களைச் செய்தல் என்பது, வேடன் புதரின் கண்ணே மறைந்துநின்று பறவைகளைப் பிடித்தற் போன்றதாகும்.

“தவம்மறைந்து அல்லவை செய்தல்
புதல்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று” (மேலது., 274)

என்று தலைவி இரந்து கூறுகிறாள்.

காக்கை

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது நம்பிக்கை. குறுந்தொகையில் காக்கை கரைவதைக் குறித்துப் பாடிய பெண்பாற் புலவர் ஒருவர் காக்கைப்பாடினியார் என்று பெயர் பெற்றிருத்தல் இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

“செஞ்சோற்ற பலி மாந்திய கருங்காக்கை...." (பொருநராற்றுப்படை, 183-184)

உரித்தாற் சிவந்த சோற்றையுடையவாகிய பலியை விழுங்கின கரிய காக்கைகள் என்பது இதன் பொருளாகும்.

காக்கையின் சிறந்த இயல்புகளில் மிகவும் போற்றத்தக்கது தனக்குக் கிடைத்த இரையினை மறைக்காமல் இனத்தைக் கரைந்து அழைத்துக் கூடி உடன் உண்ணும் உயர்பண்பாகும். அத்தகைய அன்புணர்வு மாந்தர்க்கு அமைய வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் 'காக்கை' என்னும் அஃறிணை முதற்பெயரை உவமையாக எடுத்தாளுகின்றார்

“காக்கை கரவா கரைத்துண்ணும் ஆக்கமும்

அன்னநீ ரார்க்கே உள" (திருக்குறள், 527)

அங்ஙனம் தன்னைச் சுற்றியுள்ள உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் தழுவிப் பேணும் தன்மையாளர்க்கு ஆக்கம் பெருகும் என்பது அவர் எண்ணம்.

“காலம் பொன் போன்றது” என்பது பழமொழி. அந்தக்காலத்தை எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மிக தெளிவாக வள்ளுவர் காக்கையின் நிலையை வைத்து உவமிக்கின்றார். ஆற்றலும் அறிவும் மிகுந்திருப்பினும் பகைமேற் செல்லும் வேந்தன், தனக்கு வெற்றி தரும் காலச்செவ்வியை நன்கறிந்து செயற்படுதல் வேண்டும். இவ்வுண்மையை அறிவுறுத்தும் பொருட்டுச் சிறந்ததோர் உவமையினைத் திருவள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

பகல் காலத்தில் ஆந்தைக்குக் கண் தெரியாததால் அதனைக் காக்கை எளிதாகத் தாக்கி அழித்துவிடும். இரவுக் காலத்தில் காக்கைக்குக் கண்ணொளி நீங்குதலின், விழித்திருக்கும் ஆந்தை அதனை எளிதில் வெல்லும். எனவே செயல் மேற்கொள்ளும் நாட்டுத்தலைவர்கள் தமக்குச் சாதகம் அளிக்கும் காலத்தைக் கருத்தில் கொண்டு செயல்படுதல் வேண்டும் என்பது கருத்து.

“பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்

வேந்தர்க்கு வேண்டும் பொழுது" (மேலது., 481)

எனும் குறள் இதனை விளக்குகிறது.

மயில்

பறவைகளில் அழகானது மயில். மயில் தோகையை விரித்து ஆடினால் மழை வரும் என்றும் கூறுவர். மயிலின் வண்ணமே அழகானது. மயில் தேசியப்பறவை மட்டும் அல்ல, பல கவிஞர்களின் வர்ணனைப் பறவையாகவும் திகழ்கின்றது. மயில் முருகக் கடவுளின் வாகனமாக பக்தி இலக்கியங்களில் போற்றப்படுகின்றது. நடனத்தில்

பலவகை நடனம் இருக்கின்றது. அதிலும் பாம்பு நடனம், மயில் நடனம் போன்றவை சிறப்பானது. சங்க இலக்கிய நூல்களில் திருமுருகாற்றுப்படையில்

“மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு" (திருமுருகாற்றுப்படை, பா.எ. 205)

'சாயலுடைமையான் மயிலைக் கண்டாற் போன்ற மடப்பம் பொருந்திய நடையையுடைய மகளிர்கள்' என்று மயிலுக்கு மகளிரை ஒப்பாகக் கூறியுள்ளது குறுந்தொகை,

“பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்

செறியெயிற் றரிவை கூந்தலின்" (குறுந்தொகை, பா.எ. 2-3)

எழுமையும் என்னோடு பயின்றடிப்பட்ட அன்பினையும் மயில்போன்ற சாயலினையும் நெருங்கிய எயிற்றெழுங்கினையும் உடைய இவளது கூந்தல் போன்றது என்று கூறுகிறது. மேலும்,

“அலங்குசினை மாஅத்து அணி மயில் இருக்கும்" (ஐங்குறுநூறு, பா.எ. 8-4)

அசையாநின்ற கிளைகளையுடைய மாமரத்தின் அழகிய மயில் வீற்றிருந்து அழகுறுத்ததற்கிடனான என ஐங்குறுநூறு கூறுகிறது.

சங்க இலக்கியத்தில் மட்டும் அல்லாது வள்ளுவரும் மயிலை மகளிருக்கு உவமையாகக் கூறுகிறார். இக்கனத்த குழையினை அணிந்தவள், இச்சோலையில் தங்கும் தெய்வமகளோ? அன்றி சிறந்ததொரு மயிலோ? அன்றி ஒரு மானிடப் பெண்ணோ? இவளை யார் என்று அறிய முடியாது, என் நெஞ்சு மயங்குகின்றது என்பதனை.

“அணங்குகொல்? ஆய்மயில் கொல்லோ? கனஞ்குழை

மாதர்கொல்? மாலுமென் நெஞ்சு" (திருக்குறள், 1081)

எனும் குறள்வழி வடித்துள்ளார்.

விலங்குகள்

விலங்குகள் என்றும் மனிதனுக்குப் பயனளிப்பவை. மனிதனும் ஆதிக்காலத்தில் விலங்குகள் போல் வாழ்க்கை நடத்தியவன். மனிதன் விலங்குகளைக் கண்டு பயந்து ஒளிந்த காலங்கள் மாறி இன்று அவைகளை எல்லாம் தன்வயப்படுத்திக் கொண்டு பயனடைகின்றான். விலங்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித்தன்மையும், வலிமையும் கொண்டு விளங்குகின்றன. விலங்குகளில் சில மனிதனுக்குப் பயன் தருபவையாக வாழ்கின்றன. கலித்தொகை,

“விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை அல்லையோ?" (கலித்தொகை, பா.எ. 13-17)

அக்காட்டினுள், உண்மையான சிங்கத்தின் குரலைக் கேட்பாயானால் பயந்து வெருவுவை அல்லவா? என வினவுகிறது. மேலும்,

"விசும்புஉற நிவந்துஅழலும் விலங்குஅரு வெஞ்சுரம்" (மேலது., ப. 150 – 6)

காட்டு விலங்குகள் பலகாலும் திரிவதனால் பாதைகளும் அங்கங்கே கவறுபட்டு மயக்கும் எனப் பாலைவழிகளின் தன்மையைக் கூறுகிறது. புறநானூறு,

"விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்" (புறநானூறு, பா.எ. 230 – 4)

காட்டிலே மேயும் ஆனினத்திற்குப் பிற விலங்கினங்கள் துயர் செய்யாதது விலங்குகளின் இயல்பைப் பகர்கிறது. வள்ளுவர் கற்றவர்களின் பெருமையைக் கூற, மக்களையும், விலங்குகளையும் உவமையாக்குகிறார். விலங்குகளுக்கும் மக்களுக்கும் எத்துணை வேறுபாடு உண்டோ அத்துணை வேறுபாடு, சிறந்த நூல்களைக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே உண்டு என்பதனை,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
சுற்றாரோடு ஏனை யவர்" (திருக்குறள், 410)

என்று விலங்கு எனும் பொதுப்பெயர் கொண்டு முடிக்கிறார்.

எருது

பழங்காலத்தில் இருந்து அதிகப்பயனுடையதாக எருதுகள் விளங்குகின்றன. எருது ஏர் உழவு செய்யவும், சுமை சுமக்கவும் வண்டிகளில் பூட்டி பயணத்திற்கும் அதிக அளவில் பயன்பட்டிருக்கின்றது என்பதனை,

"எருதே இளைய் நுகம் உண ராவே" (புறநானூறு, பா.எ. 102 – 1)

எருதுகள் இளையன, நுகம் பூண்டதையும் மதியாது பூரிப்புடன் வண்டியை இழுத்துச் செல்வன எனப் புறநானூறு கூறுகிறது.

"ஈரச் செவ்வி உதவின ஆயினும்,
பல்எருத் துள்ளும் நல் எருது நோக்கி,
வீறுவீறு ஆயும் உழவன் போலப்" (மேலது., பா.எ. 289 – 1)

கழனியிலே ஈரம் உழவு பருவமாகவே உளதென்றாலும் தன் எருதுகள் பலவற்றினும் நல்ல எருதையே தேர்ந்தெடுத்து நாளேர் பூட்டி உழ எண்ணுபவன் உழவன் என மேலும் கூறுகிறது.

இடுக்கண் வரும்பொழுது அஞ்சாது எதிர்கொண்டு வெற்றி பெறுதல் வேண்டும் என்று அறிவுரை கூறும் பாங்கினை நோக்குவோம். எடுத்த செயல் முடிவுபோக முயலுங்கால், ஏதாவது ஒரு காரணத்தினால் சிறுதடைகள், தொல்லைகள் எதிர்ப்படலாம். அவற்றைக் கண்டு மனம் தளர்தல் கூடாது. சோம்பி விடுதல் கூடாது. மாறாக ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் தொடர்ந்து பணிபுரிந்து வெற்றி பெறுதல்

முடியும் என்று நம்பிக்கை தருகிறார் வள்ளுவர். அத்தகையோரை ஊக்கப்படுத்துவதற்கு உலகியலில் காணப்படும் உவமை ஒன்றினை எண்ணிப்பார்க்கிறார்.

'அவன் மாடாக உழைக்கிறான்' என்பது உலக வழக்கு. வண்டியில் பூட்டப்பெற்ற காளை, மேடு, பள்ளம், சேற்று நிலங்களில் இழுத்துச் செல்லுதற்கு எதிர்ப்படும் இடுக்கண்களைச் சமாளிக்கிறது. இதன் செயல்திறனைப் பரிமேலழகர் அழகுற விளக்கியுள்ளார். மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் காளை விடாமுயற்சியுடன்வண்டியைஇழுத்துச்செல்லுதல்போலமனிதன்முயற்சியுடையவனாய் மெய் வருத்தம் பாராது, கண்துஞ்சாது தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னோக்கி வெற்றி நடைப்பயிலுதல் வேண்டும் என்று வள்ளுவர் விளக்குகிறார். இதனை,

“மருத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.” (திருக்குறள், 624)

விடாமுயற்சியும் கடும் உழைப்பும் கொண்டவர்களின் முன்பு வரும் துன்பம் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று தான் துன்பப்படும் என்ற கருத்து நிலையில் வள்ளுவர் உரைக்கின்றார்.

யானை

யானை விலங்கினங்களிலே மிகப்பெரியதும் வலிமையுடையதும் என்று கருதப்படுகிறது. யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பர். யானையின் ஒவ்வோர் உறுப்பும் மதிப்புடையது. யானையை இறைவனின் பாகமாக வழிப்படுகின்றனர். விநாயகரின் உருவமாகவும் வழிப்படுகின்றனர். பண்டையப் போர்ப் படைகளில் யானைப்படையும் ஒன்றாகும். குறுந்தொகையில்,

“செங்களம் படக் கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்" (குறுந்தொகை, பா. எ.1 – 2)

குருதியாற் சிவந்து திரண்ட அம்பினையும் சிவந்த மருப்பினையுடைய யானை என விளக்கம் தருகிறது. ஐங்குறுநூறுயில்,

“கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்புநெறி வந்த" (ஐங்குறுநூறு, பா.எ. 78 – 2)

ஒளியுடைய இலையமைந்த நெடிய வேற்படையினையும் விரைந்து செல்லும் குதிரையினையும் உடைய கிள்ளி வேந்தனுடைய பகைவர் மதிலை அழிக்கின்ற யானைப் படையைப் போல எனக் கூறுகிறது.

“பாஅல் அம் செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்" (கலித்தொகை, பா.எ. 5 – 2)

அகன்ற காதும், பருத்து கால்களும் உடைய யானைகள் கூட்டம் கூட்டமாக அங்கே மதங்கொண்டு திரிந்து கொண்டிருக்கும் எனக் கலித்தொகை கூறுகிறது.

முடிவுரை

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் உயர்ந்த குறிக்கோள் இருத்தல் வேண்டும். அக்குறிக்கோள் விழுமியதாக இருத்தல் நன்று. அக்குறிக்கோளினை நோக்கி மனிதன் அடியெடுத்து வைத்தல் வேண்டும். சிறிய பொருளை எளிதில் பெறுவதைவிட அரியபொருளை அடைவதற்கு முயற்சிகள் பல மேற்கொண்டு முடியாமல் போயினும் குற்றமில்லை. நினைப்பன எல்லாம் உயர்ந்தனவாதல் வேண்டும். இக்கருத்தினைத் திருவள்ளுவர் வேட்டுவனின் செயலில் வைத்து விளக்கியுள்ளார்.

துணைநூற்பட்டியல்

1. சீனிவாசன், 1997. திருக்குறள், பரிமேலழகர் உரை, முதற்பதிப்பு, கழக வெளியீடு.
2. சோமசுந்தரனார், பொ.வே., 2008. திருமுருகாற்றுப்படை, ஐந்தாம்பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
3. சோமசுந்தரனார், பொ.வே., 2008. பெரும்பாணாற்றுப்படை, ஐந்தாம்பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
4. சோமசுந்தரனார், பொ.வே., 2008. மதுரைக்காஞ்சி, ஐந்தாம்பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
5. சோமசுந்தரனார், பொ.வே., 2008. குறுந்தொகை, ஐந்தாம்பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
6. சோமசுந்தரனார், பொ.வே., 2008. ஐங்குறுநூறு, ஐந்தாம்பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

References

1. Srinivasan, 1997. Thirukkural, Parimelazhagaar Urai, first edition, published by the Society.
2. Somasundaranar, P.V., 2008. Thirumurukatrupadhi, fifth edition, Saiva Siddhanta Nulapathipukasalagam, Chennai.
3. Somasundaranar, P.V., 2008. Perumpanattarupadhi, fifth edition, Saiva Siddhanta Nulapathipukasalagam, Chennai.
4. Somasundaranar, P.V., 2008. Maduraikanchi, fifth edition, Saiva Siddhanta

Nulapathipukasalagam, Chennai.

5. Somasundaranar, P.V., 2008. Kurunthogai, fifth edition, Saiva Siddhanta Nulapathipukasalagam, Chennai.
6. Somasundaranar, P.V., 2008. Aingurunuru, Fifth Edition, Saiva Siddhanta Publishing House, Chennai.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

சுகந்தி.சு, கண்ணன்.அர, "திருக்குறளில் அஃறிணை முதற்பெயர்கள்" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 2, ஏப்ரல் 2025, பக். 24-32

Cite this Article in English

Suganthi.S, Kannan. R , "Akrinai first names in the Thirukkural " Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 2, April 2025, pp. 24-32

திணை மரபுகளும் சிறைப்புறமும்

Thinai Marabugalum Chiraipuramum

திலகவதி. அ*, பிரேம் குமார். ரா*

*தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 006

Thilagavathi A*, Prem Kumar R*

*Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore – 641 006

ORCID ID: https://orcid.org/0000–0003–3265–5629

DOI: 10.5281/zenodo.15309087

Abstract

Tolkappiyar has divided the Againsta as seven. Among them are the hands of the hands of them, except for the two sides of the temple, and the head of the head of the chief. Often the inner songs are the head of the head of the chief, or that the memories of themselves are not reminiscent of the memories of themselves, or the girlfriend of the girlfriend, the nature of the land, the nature of the land is based on the characteristics of the land. This review is exploring the traditions of the environment and the traditions of the environment.

ஆய்வுச்சுருக்கம்

தலைவன் தலைவிக்கு இடையே வெளிப்படும் காதலானது ஐந்து திணைகளில் பாடல்களாகக் கூறப்பட்டுள்ளன. இருவருக்குள்ளும் நிகழும் அன்பின் பரிமாற்றங்கள் உயர்திணை மற்றும் அஃறிணையை மையமாகக் கொண்டு காணப்படுகிறது. இவையாவும் அந்தந்தச் சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டன. அகப்பொருள் சார்ந்து காணப்படும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்றவற்றையும் இதில் அடங்கும். இதில் சிறைப்புறச் சூழல்களும் காணப்படுகின்றன. இதற்கான மரபுகள், நிகழ்த்தக்கூடியவர்கள், தொடர்புடையவர்கள் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் நோக்கமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

தொல்காப்பியர் அகத்திணையியலை ஏழு திணைகளாகப் பகுத்துள்ளார். அவற்றுள் கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டு திணைகள் ஒழிய பிற ஐந்து

திணைகளும் தலைவன் தலைவி இருவருக்குமான அன்பு நிலைப்படும் களமாக விளங்குகிறது. பெரும்பாலும் அகத்திணை பாடல்கள் தலைவன் தலைவி இருவரும் கூடி இருந்த காலத்து நினைவுகளை தமக்குத் தாமே நினைவு கூர்ந்து கொள்வதாகவோ நினைவினை ஆற்றியிருக்க மாட்டாமல் தனக்குத்தானே ஆற்றுவித்துக் கொள்வதாகவோ தோழி, பாங்கன், இயற்கை பொருட்கள் போன்றவற்றிடம் உரைப்பதாகவோ அமைகின்றது. நிலங்களின் தன்மை, சூழல், பண்பு போன்றவை முதல், கரு, உரிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு நிகழும் என்று சங்கப் புலவர்கள் வகைப்படுத்தி உள்ளனர். இத்தகைய வகைப்பாட்டோடு சிறைப்புறச் சூழல் என்பது எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் சிறைப்புறச் சூழலை நிகழ்த்தக் கூடியவர்கள், தொடர்புடையவர்கள் யார் யார் என்பதையும் சிறைப்புறச் சூழலுக்கான மரபுகள் பற்றியும் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

Keywords: Sangam Literature, Thinai, Marabu, Situation, Thalaivan, Thalaivi, Love, Agaporul

அகப்பொருள் விளக்கம்

ஒருமித்த அன்புடைய இரு பாலரும் தம்முள் அனுபவிக்கும் இன்பத்தை பற்றி கூறுவது அகப்பொருள். உள்ளத்தில் உண்டாகும் இன்ப உணர்ச்சியை வெளியில் கூற இயலாததால் உள்ளத்தால் மட்டுமே உணர்ந்து அனுபவிக்க தக்கதாக இருப்பதால் அகப்பொருள் என்றானது. "அகம் என்பது அடங்கியது, இடம், உள்ளிடம் , மனம் உள்ளிட்ட பல பொருள் தரும் பொருள் சொல்லாகும். உள்ளமாகிய மன உணர்வினால் நுகர்ந்து இன்பம் வரும் காம இன்பத்தையும் ஆகுபெயரால் இச்சொல் உணர்த்தும் என்பர்" மு. சண்முகம் பிள்ளை.

அகத்திணை பாகுபாடு

திணையானது அகத்திணை, புறத்திணை என இருவகை பட்டதாகும். அவற்றுள் அகத்திணைகள் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழு வகையாகும். ஆனால் அகத்திணை என சிறப்பித்து கூறப்படுவன நடுவண் ஐந்திணைகளே ஆகும்.

கைக்கிளை முதலா பெருந்திணை இருவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல்காப்பியம், அகம்1)

கைக்கிளை ஆனது ஒரு தலை காமமாகவும், பெருந்திணையானது பொருந்தா காமமாகவும் இருப்பதால் இவை இரண்டும் ஒழிய நடுவண் ஐந்திணைகள் மட்டுமே அன்பின் ஐந்திணைகள் என்று குறிக்கப்படுகிறது. அன்பின் ஐந்திணை என்பது ஒத்த காமம் என்பதை சங்கப்பாடல்கள் வழி அறியலாம்.

அகத்திணை மரபுகள்: பெயர் கூறாப் பண்பு

“மக்கள் முதலிய அகனைந் திணையும்

சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்” (தொல்காப்பியம், அகம். 57)

ஐந்திணைக் காதல் ஒழுக்கங்கள் எல்லா மக்களுக்கும் உரியதாக கருதியதால் இதனை தனி ஒருவர் பெயர் சூட்டி புலவர்கள் பாடவில்லை.தலைவன்,தலைவி என்ற பொதுப்படையான பெயரெ பயன்படுத்தப்பட்டுள்ளது. அகமானது பெயர் சுட்ட பெறாமலும், புறமானது பெயர் சுட்டுவதும் மரபாக இருந்துள்ளது என்பதை சங்க அகப்புற நூல்கள் வழி அறிய முடிகிறது.

தலைவிக்குரிய மரபு

அச்சமும் நாணும் மடனும் முந்துறத்த

மிச்சமும் பெண்பாற் குரிய என்ப - தொல் களவு 7.

அச்சம், நாணம், மடம் என்ற மூன்று பண்புகளும் பெண்களுக்கான மரபாக தொல்காப்பியத்தில் சுட்டப்படுகிறது. தலைவன் மீது அளவுகடந்த அன்பு கொண்டவளாக தலைவி இருந்தாலும், தலைவனைப் பிரிந்து தனித்திருக்க முடியாதவளாக இருந்தாலும், உள்ள உணர்வையும், உடல் வேறுபாட்டையும் தலைவன் முன் வெளிப்படுத்தாமல் தலைவி நடந்து கொள்ள வேண்டும் என்பதே களவொழுக்க மரபாக இருந்துள்ளது என்பதை,

"........................... இதுவென யானது

கூறின் எவனோ தோழி வேறு உணர்ந்து

அணங்குஅறு கழங்கின் கோட்டம் காட்டி

வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து (நற்றிணை. 47)

தலைவனை அணைத்து அன்பு செய்யாததால் மேனியானது மாறுபாடு உற்றது, பசலை படர்ந்தது என்று கூறினால் அதனால் குற்றம் உண்டாகி விடுமோ என்று தலைவியின் மேனி வேறுபாட்டை தலைவன் சிறைப்புறமாக இருக்க மறைபொருளாக உணர்த்துவதாக இப்பாடல் அமைகிறது. இதன் வழி, தலைவியின் உடலில் வேறுபாடு உண்டானாலும் அதனை தலைவனிடம் கூறுதல் என்பது தலைவிக்கு மரபல்ல என்பது தெளிவாகிறது.

அன்பின் ஐந்திணை

தலைவன் தலைவி இருவரும் தம்முள் ஒருவரை ஒருவர் கொள்ள நினைக்கும் சூழலில் காதல் கொள்வது குறிஞ்சித் திணை. கல்வி, பொருளீட்டல், போர்க்களம்

செல்லல் போன்ற சூழலில் தலைவன் வரவினை எதிர்நோக்கி காத்திருப்பது முல்லை திணை. இருவருக்கும் இடையே உண்டாகும் ஊடல் காரணமாக கடலுக்குச் சென்று திரும்பி வர தாமதமாவதாலோ, வேறு காரணங்களாலோ பிரிந்து இருப்பது நெய்தல் திணை. வழித்தடத்தில் தலைவனுக்கு உண்டாகும் ஊறுகளை எண்ணி வருந்தி இருப்பது பாலை. இவ்வாறான அன்பின் ஐந்திணைச் சூழல்களில் குறிஞ்சி, நெய்தல் என்ற இரண்டு திணைகளிலும் களவு கால அலர் பேச்சு, இச்செறிப்பு வரைவினை தாமதமாக்கும் தலைவனின் செயல்பாடு போன்றவையும், மருதத் திணையில் பரத்தையர் பிரிவு உண்டான பின் தலைவியை நாடிவரும் சூழலிலும் சிறைப்புறப் பாடல்களை காண முடிகிறது. இது கொண்டு சிறைப்புற பாடல் என்பது அன்பின் ஐந்திணைகளில் குறிஞ்சி, மருதம், நெய்தல் மூன்றிலும் உள்ளது என்பதை அறிய முடிகிறது. இதில் மருதத்திணையில் வருகிற சிறைப்புறப்பாடல்கள் தலைவி தன் மகனிடம் தலைவனின் செயல் குறித்து கூறுவதாகவே அமைந்துள்ளது. மருதத்திணை சிறைப்புற பாடல்கள் களவு நிலையிலிருந்து மாறுபட்டு கற்பு நிலையில் அமைந்ததாக பாடப்பட்டுள்ளது.

களவு ஒழுக்கம்

களவு என்பது “காதலால் இருவர் தாமே அன்பு கொண்டு பிறர் அறியாமல் காதலிக்கும் ஒழுக்கம்” என்கிறது தொல்காப்பியம். மறைந்த ஒழுக்கம் என்று அவர் களவைக் கூறுவதைக் கொண்டு பெற்றோர்கள் அறியாமல் காதலர்களாக ஒழுகுவது என கூறலாம் என்கிறார் பா. அருணாச்சலம் அவர்கள். மேலும், “ஒத்தார்க்கும் மிக்கார்கும்” பொதுவாகிய கண்ணியரை தமர் கொடுக்கக் கொள்ளாது கன்னியர் தம் இச்சையால் தமரை மறந்தும் புணர்ந்தும் பின்னும் அறநிலை வழாமல் நிற்றலால் அறம் எனப்படும் என்றும் களவினை இளம்பூரணர் கூறுகிறார். சுருங்கச் சொல்லின் களவு ஒழுக்கம் என்பது இயற்கையாய் பருவம் எய்திய ஆணும் பெண்ணும் பாலின தூண்டலால் உந்தப்பட்டு காதல் கொள்வது எனலாம். இவ்வாறு காதல் கொண்ட இருவரும் ஊரார் அறியாத வண்ணம் அன்பை அவர்களுக்குள் பகிர்ந்து கொள்வது களவு ஒழுக்க வாழ்வாகிறது. இக்களவொழுக்க வாழ்வினைச் சங்கச் சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதற்கு சங்க நூல்கள் சான்று பகிர்கின்றன.

களவிற்கான சூழல்கள்

தொல்காப்பியர் செய்யுள்களில் களவு நிகழக்கூடிய கலன்கள் நான்கினை சுட்டுகிறார். அவை பின்வருமாறு,

காம உணர்ச்சியும் இடர்ந்தலை படலும் பாம்போடு தளார் தோழியர் புணர்வும் மின் நாங்க நாள் வகையிலும் அடைந்த சார்கோடு மரையென மொழிதல் மரயோராதே (தொல்காப்பிய செய்யுள். 78) அதாவது இயற்கை புணர்ச்சி, இடர் தலைப்பாடு, பாங்கர் கூட்டம், பாங்கியர் கூட்டம் என்ற நான்கினை அடிப்படையாகக் கொண்டு

களவொழுக்கம் நிகழ்கிறது என்பதை தொல்காப்பியம் விளக்குகிறது.

இயற்கை புணர்ச்சி

தலைவனும் தலைவியும் சந்தித்துக்கொள்ளும் முதல் களம் காமப் புணர்ச்சி அல்லது இயற்கை புணர்ச்சி என்று அறியப்படுகிறது. குறிஞ்சித்திணையில் பருவம் எய்திய தலைவியானவள் தாயின் கூற்றுப்படி தினைப்புனம் காவல் செய்ய தோழியரோடு செல்கிறார். அப்போது வேட்டையாடுவதன் பொருட்டாக வந்த தலைவன், என் அம்பால் புண்பட்ட மதயானை இந்தப் பக்கம் வந்ததா? என்று தலைவரிடம் கேட்கிறார்; அவளும் இல்லை என்று மறுமொழி உரைக்கிறாள். இத்தகைய இயற்கைப் புணர்ச்சி சூழலை அகநானூற்றில் 388ஆவது பாடல் வழி கீழ்க்கண்டவாறு விளங்கிக் கொள்ளலாம்.

மைஈர் ஓதி மடநல் லீரே
நொவ்வு இயல் பகழி பாய்ந்தன, புண்கூர்ந்து
எவ்வமொடு வந்த உயர் மருப்பு ஒருத்தலும்
புனத்துழிப் போகல் உறுமோ மற்று எனச்
சினவுகொள் ஞமலி செயிந்துப்புடை ஆடச்
சொல்லிக் கழிந்த வல்விற் காளை (அகம்.388)

வேங்கை மரத்தில் கட்டிய பரண் மீது இருந்து தினைப்புனத்தை உண்ண வந்த கிளிகளைத் தலைவியானவள் தன் தோழியரோடு விரட்டிக் கொண்டிருக்க, அப்போது வலிமையான வில்லை உடைய தலைமகன் ஒருவன் வந்து தன் அம்பால் புண்பட்ட யானை வந்ததோ? என்று கேட்க அவன் மீது தலைவிக்கு அன்பு உண்டாகிறது. முன்பின் அறியாத ஒரு ஆடவன் மீது கண்டதும் உள்ள குறிப்பு தோன்றுவதே இயற்கை புணர்ச்சி.

“நாட்டம் இரண்டும் அறிவுடம் படுதற்கு
கூட்டி உரைக்கும் குறிப்புரையாகும்" (தொல்காப்பியம். 1041)

அதாவது, இருவரின் உள்ள குறிப்பையும் வாய் மொழியால் கூறிக் கொள்ளாது பார்வையின் வழியே பரிமாறி கொள்வது இயற்கை புணர்ச்சி என்பதைத் தொல்காப்பிய நூற்பா மூலமாகவும், அகநானூற்று பாடல் மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.

குறியிடம்

“தலைவன் தலைவியைக் காணுவதற்கு குறித்த இடம் களம் எனப்படும் தலைவியை இவ்விடத்தைக் குறிப்பாள்; ஏனெனில் அவளே எளிதாக அணுகும் இடம் அறிவாள். சில சமயங்களில் தோழியும் நிமிடத்தை குறிப்பது உண்டு”. (தமிழண்ணல்) ஊரின் வழியே எளிதாக தலைவி அறிந்து தலைவனை சேரும் இடம் பகற்குறியாகவும் பகற்குறி பல்வேறு காரணங்களால் தடைபடும்போது இரவு குறி நேர்ந்திடும். இரவுக்குறி

என்பது தலைவியின் வீட்டு மதில் புறத்தே தலைவன் கேட்கும் அண்மையதாக அமையும்.

"கண்நேர் இதழ தண்நறுங் குவளைக்
குறுந்தொடர் அடைச்சிய நறும்பல் கூழை
நீடுநீர் நெடுஞ்சுனை ஆயமொடு ஆடாய்
உயங்கிய மனத்தையாகி புலம்பு கொண்டு
இன்னை ஆகிய நின் நிறம் நோக்கி" (அகம். 358)

தோழி கூற்றாக அமைந்த அகநானூற்று பாடல், தலைவி வருத்தம் உற்றதால் அவளது மேனி வேறுபாடு அடைய என்ன காரணம் என்று தாய் கேட்டால் நான் என்ன செய்வேன் என்று தலைவன் பகற்குறியிலே அண்மையனாக இருக்க தலைவியின் பிரிவாற்ற தன்மையை உணர்த்தும்படியாக அமைந்துள்ளது.

இற்செரிப்பு

தலைவியின் களவொழுக்கம் அன்னைக்குத் தெரியவரும் நிலையில் இற்செரிப்பானது நிகழ்கிறது. இதனால் தலைவியைக் காண முடியாத தலைவன் வருத்தம் கொள்வான். தலைவியின் வறுத்த நிலையை அறிந்த தோழி, தலைவியின் நிலையை உணர்த்தி வரைவு கடாவுதலை முன்னெடுப்பாள்.

ஆடமை ஆக்கம் ஐதுபிசைந் தன்ன
தோடமை தூவித் தடந்தாள் நாரை
நலன் உணப் பட்ட நல்கூர் பேடை
கழிபெயர் மருங்கில் சிறுமீன் உண்ணாது
கைதைஅம் படுசினைப் புலம்பொடு வதியும்5
தண்ணம் துறைவன் தேரே கண்ணின் (நற்றிணை 178)

என்ற நற்செயலையின் தோழி கூற்று பாடலாக அமைந்த சிறைபுறப் பாடலானது நெய்தல் திணையில் ஆண் நாரையால் இன்பம் துய்க்கப்பெற்ற பேடை உண்ணாமல் தாழை மரத்தில் சென்று தங்கியது என்பதன் வாயிலாக தலைவனால் இன்பம் துய்க்கப்பெற்ற தலைவி இச்சரிக்கப்பட்டுள்ளதாலும் தலைவனின் தேரினைக் கூட காண முடியாததாலும் உடல் மெலிவுற்று வருந்தும் வகையில் இருக்கிறாள் என்று தலைவி தன் வீட்டாரால் உச்சரிக்கப்பட்டுள்ளமையை தலைவன் அண்மையனாக இருக்க உணர்த்துவதாக அமைகிறது.

அலர் அச்சம்

தலைவியின் களவொழுக்கம் அறிந்த ஊரார் அலர் தூற்றுவதைத் தலைவனுக்கு உணர்த்தி வரைவு கடாபவளாக தோழி இருக்கிறாள். சில நேரங்களில் தலைவன்

சிறைபுறமாக இருக்க அலருக்கு அஞ்சிய தலைவி தோழிக்குக் கூறுவதாக உரைப்பதும் உண்டு அவ்வாறான தலைவிக்கூற்று அமைந்த நெய்தல் திணைப் பாடலானது,

"அலர் யாங்கு ஒழிவதோழி பெருங்கடல்
புலவு நாறு அகந்துறை வளவன் தாங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் நெடுந்தேர்
யான் கண் டன்னே இலனே" **(குறுந்தொகை 311)**

தலைவன் இரவில் தலைவியை காண தேரில் வந்துள்ளதை தலைவி காண்பதற்கு முன்னதாக தோழியர் கூட்டம் கண்டதால் அலர் தோன்றியது. தோன்றிய இந்த அலர் பேச்சினை எப்படி சரி செய்வது என்று தெரியவில்லையே என்று அலர் உண்டானதால் வரைவினை விரைவாக தலைவன் மேற்கொள்ள வேண்டும் என்பதை இப்பாடல் விளக்குகிறது. அலர் உண்டானால் அதன் வழி தோன்றலாக இச்செரிப்பு நிகழும் அதன் அடுத்த படியாக வெறியாட்டு நிகழும் சில நேரங்களில் வேற்று வரைவும் உண்டாக வாய்ப்பு உண்டு. இவற்றையெல்லாம் எண்ணியே அலர் குறித்த அச்சம் கொண்டவளாகத் தலைவி காணப்படுகிறாள் என்பதை இங்கு விளங்கிக் கொள்ளலாம்.

வெறியாட்டு

களவு ஒழுக்கத்தால் தலைவனைக் காண முடியாத சூழல் உண்டாகும். அப்போது தலைவி மெலிவும் சோர்வும் முற்று காணப்படுவாள். தலைவியின் உடல் வேறுபாட்டை கண்டாயானவள் அதன் காரணம் என்ன என அறியும் பொருட்டாக வெறியாட்டினை நிகழ்த்த முடிவு செய்வாள். “பெண்ணைச் சார்ந்து பெண்களுக்காக பெண்களால் நிகழ்த்தப்படும் ஒரு சடங்கு"

“முதுவாய் பெண்டிர் அதுவாய் கூற
களம் நன்கு இழைத்து கண்ணி சூட்டி
வளநகர் சிலம்ப்ப பாடி பலி கொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகு ஆற்றுப் படுத்த உருகெழு நடுநாள்" **(அகம். 22)**

தலைவன் திருமணத்தின் பொருட்டாக பொருள் தேடிச் சென்ற நிலையில் வருத்தம் கொள்கிறாள். தலைவியின் இவ்வருத்த நிலையை கண்ட ஊரார் முருகனை போற்றினால் இவள் நலமடைவாள் என்று கூற தாயானவள் வெறியாட்டினை ஏற்பாடு செய்கிறார். வேலனால் முருகனின் வேலிக்கு மாலை சூட்டி பலி கொடுத்து உறுதியோடு கலந்த செந்திலினை தூவி முருகனை வரவைத்து வெறியாட்டினை நிகழ்த்தினார். இந்த வெறியாட்டால் இவள் துன்பம் நீங்கியது என்று ஊரார் சொல்ல சிரிப்பு வருகிறது என்றது. வலி பெரிய ஆட்டுச் சடங்கானது தலைவிக்குச் சிரிப்பினைத் தோற்றுவித்தது என்பதை உணர்த்துகிறது.

முடிவுரை

அகத்திணை அன்பின் ஐந்திணை இரண்டிற்கும் ஆன வேறுபாடு அகத்திணையின் வகை அகத்திணையில் தலைவிக்குரிய மரபு தலைவன் தலைவி இயல்புகள் போன்றவை அக இலக்கணத்தின் அடிப்படையாக அமைகின்றன. எந்தவிதமான முன் அறிமுகமும் இல்லாத இருவர் தங்கள் அன்பின் வெளிப்பாடாக ஊழியின் காரணமாக இணைவது இயற்கை புணர்ச்சி. களவு ஒழுக்கத்திற்கான சூழல்களாக இயற்கை புணர்ச்சி, இடர்தலைப்பாடு, பாங்கர் கூட்டம், தோழியர் கூட்டம் என்ற நான்கும் அமைகிறது. இயற்கை புணர்ச்சி நிகழ்ந்த பின்னர், தலைவன் தலைவியை சந்தித்தல் வேண்டி தலைவியின் தோழியிடம் மதியுடன் பட்டு பின்னர் குறியிடம் குறிக்க முற்படுகிறான். குறியிடமானது பகற்குறி இரவுக்குறி என்று இரு வேறுபட்ட குறியிடமாக அமைகிறது.

தலைவன் தலைவி இருவருக்குமான களவு ஒழுக்க வாழ்வு தாய்க்கு தெரியும்போது அல்லது ஊராரின் அலர்ப்பேச்சாலோ தலைவியின் உடல் மெலிவுரும்போதோ இச்செரிப்பானது முன்னெடுக்கப்படுகிறது. இச்செரிப்பும் வெறியாட்டும் களவு ஒழுக்க நிகழ்வினை கற்பு நிலைக்கு மாற்றக்கூடிய முதன்மையான படி நிலையாக விளங்குகிறது. உடல் மெலிவின் பொருட்டாக உண்டாகும் வெறியாட்டு தலைவியின் உடம்பு சார்ந்த ஒன்றாக இருந்துள்ளதை ஒவ்வொரு வெறியாட்டு சூழல் பாடல் மூலமாக விளங்கிக் கொள்ள முடிகிறது. தலைவியின் ஒத்த வயதுடைய தோழி தலைவியின் அனைத்து செயல்பாடுகளிலும் உடன் இருந்து அவளைப் பாதுகாத்து வழி நடத்தும் பண்புள்ளவளாக இருந்துள்ளாள். தலைவன் தலைவி இரு வீட்டாரும் கொடுக்க கொள்வது, கொடுக்காமலே கொள்வது, உடன்போக்கு என்ற இரு வேறுபட்ட காரணத்திற்கான முன்னெடுப்பும் சங்க சமூகத்தால் ஏற்கப்பட்டுள்ளது. ஒருவரை ஒருவர் இயல்பாக விரும்பி ஏற்றுக் கொண்டு வாழக்கூடிய வாழ்வினை முன்னோர் ஏற்றுக் கொண்டனர் என்பது ஒரு சிறந்த சமூகத்தின் அடையாளம் என்றும் கூறலாம்.

Refences

1. Ilampuranar (Editor), Tolkappiyam (Letter,Word,Meaning), April 2010, Sharatha Publishing House, Rayapetta, Chennai - 600 014.

2. Pera.Munavar Bhakyamery, A History of Tamil Literature Towards Diversity (Refined and Expanded Edition), First Edition 2014, Bhuventhan Publishing House, Mylapore, Chennai - 600 004

3. S.V.Subramanian, Sanga Literature Patupattu Source and Exposition, Manivasakar Publishing House, Fifth Edition, Chennai - 600 104

4. Puliyurkesikan, Silappathikaram Source and Text, Gaura Publishing House Narayana Krishnaraja Puram, Tiruvallikeni, Chennai – 600 005

5. Artist's Text, Thirukkural, Thirteenth Edition - 2013, Thirumal Sadiyam, Chennai – 600 017

6. S.V.Subramanian, Sangha Literature Octopus, Manivasakar Publishing House, Chennai – 600 104

7. Dr.B.Kavitha (Editor), Ethnography in Sangha Literature, 2023, Masivan Publishing House, 111/199 b. Kudalur, Villupuram - 605 755

8. Mailai Seeni Venkatasamy, Ancient Tamil Commerce (Sangakalam), Sri Senpaha Publishing House Chennai – 600 017

9. M. Varatharasan, Nature in Palanthamil Literature, Pari Station, 184 Broadway, Chennai - 600 108

10. A. Thilakavathy, and Dr. M. Sivapalan. “Travel Components in Perumpanatruppadai”. PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 3, July 2023, 10-21, https://pulamejournal.com/index.php/pulam/article/view/137. DOI: 10.5281/zenodo.8109846

11. A.Thilagavathi, and Dr Sivabalan M. “Travel Components in Cirupanatruppadai”. PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, Vol. 3, No. 2, Apr. 2023, 27-34, https://pulamejournal.com/index.php/pulam/article/view/127 DOI: 10.5281/zenodo.7879864

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

திலகவதி. அ, பிரேம் குமார். ரா, “திணை மரபுகளும் சிறைப்புறமும்” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 2, ஏப்ரல் 2025, பக். 33-41

Cite this Article in English

Thilagavathi.A, Prem Kumar R, “Thinai Marabugalum Siraipuramum” Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 2, April 2025, pp. 33-41